1751

Approved by the Text-Book Committee.

SELECTIONS FROM TAMIL PROSE

(REVISED)

BOOK I

26 SEP 1931

BY

M. S. Thirunavukkarasu Mudaliar,

LECTURER IN TAMIL, PACHAIAPPA'S COLLEGE, MADRAS.

K. PALANIANDI PILLAI & CO.,

PUBLISHERS,

: : MADRAS.

TB
031,6 6
N31·1
120605

உரைமணிக் கோவை

முதற் பாகம்

பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்

தொகுத்தது

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

திருவல்லிக்கேணி, சென்னை

[விலை அணா 4

பதிப்புரிமை]

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD, MADRAS.

பொருளடக்கம்

பக்கம்

1. மாணுக்கனுக்கு அறிவுறுத்தல் 1
—M. S. கோமதீச்சுவரன் B.A., L.T.
2. இரசவாதம் 4
—ஆறுமுக நாவலர்
3. பறவைகளின் முட்டைகள் 8
—சேலை. சகாதேவ முதலியார்
4. நன்னடக்கை 11
—'ஜன விநோதினி'
5. படிக்காசுப் புலவர் 14
—மணி. திருநாவுக்கரசு முதலியார்
6. மூன்று கோப்பைத் தண்ணீர் 17
—மணி. திருஞானசம்பந்த முதலியார்
7. ஓர் ஆடும் அதன் குட்டியும்—I 21
8. ,, ,, —II 25
—மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார்
9. இந்திய நாணயங்கள்—I 28
—G. இரத்தினம் பிள்ளை B.A., L.T.
10. ஒதல்லோ—I 33
11. ,, —II 37
—மணி. திருஞானசம்பந்த முதலியார்

		பக்கம்
12.	இந்திய நாணயங்கள்—II	40
13.	தைரியமுள்ள போர்வீரன்—I	46
14.	,, ,, —II	51
	—மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார்	
15	வேனிஸ் வர்த்தகன்—I	55
16.	,, ,, —II	59
	—மணி. திருஞானசம்பந்த முதலியார்	
17.	உலக ஞானம்	62
	—'ஜனவிநோதினி'	
18.	இராமலிங்கசுவாமிகள் கல்வி கற்ற வரலாறு—I	66
19.	,, ,, —II	72
	—மணி. திருநாவுக்கரசு முதலியார்	
20.	சொந்த வீடு	76
	—'ஜனவிநோதினி'	

உரைமணிக் கோவை

முதற் பாகம்

1. மாணுக்கனுக்கு அறிவுறுத்தல்

நீ பள்ளிக்குச் சென்று வருகிருய். உலகத்தில் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குக் கல்விச்சாலை மிகவும் அவசியம். ஆகையால், ஆங்கு நீ கற்கவேண்டிய விஷயங்கள் அநேகம் உள. கடவுளால் படைக்கப்பட்ட இப்பேருலகில் கல்விச்சாலை ஒரு சிறிய உலகமாகும். நீ கலாசாலையில் உத்தம மாணுக்கனுய் நடந்துகொள்வாயாயின் இவ்வுலக வாழ்க்கையை நன்ருக நடத்தி உலகத்தில் பிறந்ததால் ஆகிய பயனை அடைவாய் என்பதில் ஐயமில்லை. ‘விளையும் பயிர் முளையில் தெரியும்’ என்னும் ஆன்ருேர் மொழிக்கு இணங்க, நீ இளமையிலேயே கற்கவேண்டிய விஷயங்கள் யாவற்றையும் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

நீ உன் தாய், தம்பி, தங்கை முதலியவர்களை விட்டுப் பிரிந்து பாடசாலைக்குச் செல்வதை வெறுக்கின்ருய். நீ இவ்வளவு காலம் இவர்களுடன் ஆடிப்பாடிக்கொண் டிருந்ததால் ஆங்குச் சென்று ஒரே இடத்தில் ஒருவருடனும் பேசாமல் மூன்றுமணி நேரம் இருப்பது சிறைச்சாலையில் இருப்பது போல் உனக்குத் துன்பத்தை விளைக்கின்றது. ஆயினும், சிறிது காலஞ்சென்றபின் நீயே பாடசாலைக்குச் செல்வதை விரும்புவாய். மானிடர் வாழ்க்கையில் மாணவர்களாய் இருக்கும் நாட்களே அதிக இன்பத்தை விளைவிக்கக் கூடியன. ஆகையால், நீ அவற்றை எக்காலத்தும் வெறுக்கலாகாது.

நீ பாடசாலையை விரும்பாததற்கு மற்றோர் காரணமும் உண்டு. நீ முதல்முதலில் ஆங்குச் செல்லும்போது அங்கிருக்கும் மாணவர்கள் உன்னுடன் பேசாது, உன்னைக் கண்டு சிரிக்கின்றார்களென்று குறை கூறுகின்றாய். அவர்கள் உன்னை முன்பின் அறியாதவர்களாதலால் உன்னுடன் பேசுவதற்கு அஞ்சுவார்கள். நீ இரண்டொரு மாதம் விடாது பாடசாலைக்குச் செல்வாயாகில், அவர்கள் உன்னுடன் பேசி, உன்னையும் தங்களுள் ஒருவனைக் கருதுவார்கள். அவர்கள் உன்னுடன் பேசாதிருந்தால் அவர்களை மூடர்களென்று சொல்வது பெருங் குற்றமாகும். எப்போதும் எவரையும் நல்லவர்களென்று எண்ணி, அவர்களிடம் அன்பைச் செலுத்துவதே சிறந்தது. நீ உணராத விஷயங்களைப்பற்றி அவர்கள் உன்னிடம் சொல்வார்களானால், அவைகள் தப்பென்று நீ தெரிந்துகொள்ளும் வரையில் உண்மை யென்று நம்புதல் வேண்டும்.

அவர்கள் அந்நியர்கள்; ஆதலால் நாங்கள் உன்னைக் கவனிப்பதுபோல் ஒருபொழுதும் கவனியார். அவர்கள் அவ்வாறு கவனியாதிருத்தலைக்குற்றமென் றெண்ணி, அவர்களை நேசியா திருத்தலினும் மூடத்தன்மை வேறொன்றும் இல்லை. நீ அவர்களிடம் இங்கிருப்போரிடம் நடந்தது போல் நடக்கலாகாது. அவர்கள் உன் விருப்பத்தின்படி எதையும் செய்யமாட்டார்கள். நீ ஒன்று சொன்னால் அவர்கள் அதற்குநேர் விரோதமாகவும் சொல்வார்கள். அவற்றை யெல்லாம் நீ பொறுத்துக் கொள்ளவேண்டும். பெற்றோராகிய நாங்கள் உன்மீது செலுத்தும் அன்புபோல் உலகத்தார் செலுத்துவார்களென்று நீ எண்ணாதே. உன் தந்தையாகிய என் வீட்டில் நீ எதையும் செய்யக்கூடும். ஆனால், பாடசாலையில் அவ்வாறு செய்ய இயலாது. அங்கு உன் போன்றோரும்

உன்னினும் மேம்பட்ட செல்வந்தரும் இருக்கின்ருர்கள். ஆதலால் நீ செல்வச் செருக்கைக் காட்டலாகாது. எவ்வாறு கலாசாலையில் உன்னை உன்னிடமிருக்கும் மாணவர்கள் நடத்துகின்ருர்களோ அவ்வாறுதான் உலகத்தார்நடத்துவார்கள். இதைக் கருதியே நான் உனக்கு இந்த விஷயத்தைப் பாடசாலைக்குப் போகும் முன்னரே அது பேருலகத்தில் அடங்கிய ஒருசிறிய உலகமென்றுமொழிந்தேன். நீ கலாசாலையிலே 'நான்' என்னும் செருக்கை அறவே ஒழித்தல் வேண்டும்.

கலாசாலையில் மாணவர்களில் சிலர் உன்னைப்போல் உடை உடுத்திக்கொண்டு வராவிட்டால் அவர்களைக் கண்டு நீ ஏளனம் செய்யாதே. ஒருவரையும் அவர்களின் வறுமையின் காரணமாய் அசட்டை செய்து வெறுத்தல் கூடாது. அவ்வாறு செய்தல் அவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கும்; நீயும் பாவத்தைத் தேடிக்கொள்வாய். பாடசாலை மாணவர்களுக்குப் பேர் வைத்து அழைக்க நீ விரும்புகின்ருய். அஃது எக்காலத்தும் துன்பத்தை விளைவிக்கும். நீ உன் அறியாமையால், அவ்வாறு கூப்பிடுவதால் ஓர் இன்பத்தை அடைகின்ருயாயினும், அவன் துன்பப்படுகின்ருன். அது காரணமாக அவன் உன்னை வெறுத்து உனக்கு எவ்விதத்திலாவது தீங்கு செய்யக் காத்திருப்பான். உலகத்தில் யாவர்க்கும் நல்லவனென்று நடந்து கொள்ளல் வேண்டும். உன் கொடிய பழக்கங்களை முற்றும் விட்டு அவர்களிடம் காணும் சிறந்த குணங்களை மேற்கொண்டு நடந்து கொள்வா யென்று நான் நம்புகின்றேன்.

உனக்கு நான் கல்வி சம்பந்தமாகச் சொல்ல வேண்டியது அதிக மில்லை. ஆங்கில மொழியை நீ கற்க வேண்டியது இன்றியமையாததே. ஆங்கில பாஷையில் எழுதியிருக்கும் புத்தகங்களை நீ படிப்பதால் உண்டாகும் பெரும்பயனுக்குக்

கணக்கில்லை. ஆயினும் அதைப்போலவே நீ நமது மொழியையுங் கவனமாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். சிலர் தேசபாஷையாகிய நம் இனிய தமிழ்மொழியை வெறுத்து அதைக் கல்லாது கழிக்கின்றனர். நீ அவர்களைப்போலின்றி உன் நாட்டு மொழியைக் கற்பதுதான் நீ எங்களுக்குச் செய்யும் நன்மையாகும். மற்றும் எல்லாப் பாடங்களையும் கவனித்துப் படித்துக்கொள். உன் உபாத்தியாயர் சொற்படி நீ நடந்து கொள்ளல் வேண்டும். அவர் பாடங்கள் கற்பிக்குங் காலத்து உன் மனத்தை வேறெங்கும் செலுத்தாது அவைகளை முற்றும் கவனமாய்க் கேட்டுக்கொள். அவர் சொல்வதில் உனக்குத் தெரியாதவை யிருப்பின் அவரை மிக வணக்கமாய்க் கேட்டுத் தெரிந்துகொள். நீ எக்காலத்தும் உன் புத்தகங்களைப் படிப்பதிலேயே காலத்தைக் கழிக்காதே; காலை மாலைகளில் உன்னைப் படைத்த தந்தையாகிய கடவுளைத் தொழுதல் வேண்டும். தேகத்தைத் திடப்படுத்தும்பொருட்டு ஒவ்வொரு நாளும் மாலைப் போதில் நன்குய் ஓடி ஆடி விளையாடுதல் வேண்டும். இவைகளைக் காட்டிலும் நான் உனக்குச் சொல்லவேண்டுவது வேறொன்று மில்லையென்று எனக்குத் தோன்றுகின்றது. இதுபோல் நீ நடந்துகொள்வதே எனக்கு இன்பத்தையும், மனத்திருப்தியையும் உண்டாக்கும் என்பதை உனக்குத் தெரிவித்து நான் இந்த விஷயத்தை நிறுத்துகின்றேன்.

---

2. இரசவாதம்

கலிங்கநாட்டிலே அரிபுரத்திலே வணிகர் குலத்திலே **தேவதத்தன்** என்று ஒருவன் இருந்தான். அவனுடைய புதல்வனுகிய **தருமதத்தன்** மிக்க செல்வத்தையுடையவனுய்,

தருமங்களைச் செய்து பெரும்புகழ் பெற்ருன். அவன் தன்னுடைய தந்தையும் தாயும் இறத்தலும், தமியனுகித் துயருழந்து, பின் ஒருவாறு தேறி யிருக்கும்பொழுது, ஓர் இரசவாதி முண்டிதமாகிய சிரசையும், குண்டலம் பொருந்திய காதையும், விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்த நெற்றியையும், உருத்திராக்ஷ மாலையையும், பிரம்பு பொருந்திய கையையும் உடையவனுய் அவனிடத்து வந்தான்.

தருமதத்தன் அவ்விரசவாதியைக் கண்டு, வணங்கி, தன் வீட்டினுள் அழைத்துக்கொண்டு சென்று, அமுது செய்வித்து, முகமன் கூறிப் பின்பு அவனை நோக்கி, 'சுவாமி, நீர் இங்கு வந்த தென்னை ?' என்ருன். வாதி அது கேட்டு, 'நம்மிடத்து ஒரு வித்தை உளது. அஃது எவருக்கும் பேசுந் தன்மையது அன்று. குருபக்தியுடையோருக்கு மாத்திரம் சொல்லத் தக்கது. நெஞ்சிற் சிறிதும் மாசில்லாத உனக்கு நாம் அதைச் சொல்வோம்; இரசத்தினுலே வேண்டிய பொன்னைச் செய்வோம் ; காரிரும்பை நாகம் ஆக்குவோம் ; மீட்டும் அதனைப் பொன்னுக்குவோம் ; ஈயத்தையும் இரசத்தையும் வெள்ளியாக்குவோம் ; வங்கத்தைப் பொன்னுக்குவோம் ; இரும்பிற் செம்புண்டாக்குவோம் ; ஈயத்தையும் அப்படியே செய்வோம். நமது வன்மையை உள்ளபடி சொல்ல விரும்பினேமாயின், அளப்பில்லாத வருடங்கள் வேண்டும். ஒரு பொன்னைக் கோடி பொன்னுக்குவோம். கோடி பொன்னை மலைபோலக் கோடி பொன்னுக்குவோம். உன் பொருளனைத்தையும் தருவாயாயின், உன் வீட்டிலே அப்பொருளை வைத்தற்கு இடமில்லை என்னும்படி செய்வோம்,' என்ருன்.

இப்படிச் சொல்லிய வாதியைத் தருமதத்தன் வணங்கி, முன்னே தன்னிடத்துள்ள நிதியையும்,

பின்னே தன்னாலே சம்பாதிக்கப்பட்ட நிதியையும், பேடகங்களில் உள்ள ஆபரணங்களையும் கொண்டுவந்து அவன் முன்னே வைத்தான். வாதி அவற்றை நோக்கி, 'ஓகோ! வணிகரில் திலகனாகிய உன்னிடத்துள்ள செல்வம் இது தானோ?' என்று கைதட்டிச் சிரித்து, 'இப்பொருள் நமது வித்தையில் இறைக்கும் போதாது. இது நாம் உருக்கு முகத்திலே சிந்துகின்ற அளவுங் காணாது. நீ நமக்குப் பின்னே திரிவாயாயின், அளப்பில்லாத பொருள் தருவோம். இதனை வைத்துக்கொள்வாயாக,' என்றான்.

அப்பொழுது தருமதத்தன், 'சுவாமி, கோபிக்க வேண்டாம். நீர் வேண்டிய பெருநிதி முழுதும் தேடிக்கொண்டு வருவேன்; இரும்,' என்று சொல்லிக்கொண்டு போய், வஸ்திரங்களையும், நிலங்களையும், இரத்தினங்களையும், ஆபரணங்களையும், வீடுகளையும், ஆடுமாடுகளையும் விற்று, மதிமயக்கத்தினாலே தருமத்தையும் விற்றான். இவ்வாறு தேடிய பெருநிதி யனைத்தையும் கொண்டுவந்து, வாதிமுன் வைத்து நின்றான்.

வாதி மனமகிழ்ந்து, அவை யெல்லாவற்றையும் அக்கினியிலே உருக்கித் திரட்டி, ஓர் உருவாக்கி, அதனிரட்டி எடைகொண்ட ரசத்தை ஓர் அம்மியிலிட்டு, அப்பொன் முழுதையும் உரைத்து, அதனை உருட்டி, மட்குகையினுள்ளே மருந்தை உள்ளுறுத்திப் பொன்னை உள்ளிட்டு, அதனிடத்தே ஒரு களங்கத்தை இட்டு, சீலைமண் செய்து, அக்கினியிலே நூற்றெட்டுக் குக்குட புடமிட்டு, அதனைப் பார்த்து, 'மிகவும் மாற்று வந்தது; இனி ஒரு வராகியிலே பழுக்கும்; காற்றில்லாத ஓர் உறையுள் காட்டு,' என்றான். தருமதத்தன் ஓர் உறையுளைக் காட்டலும், இரசவாதி அதனுள்ளே போய், விறகின் மீது, சுடலை யக்கினி

கொண்டு வராகிமேல் இட்டுப் புகைப்பித்தான். அதனுலே தருமதத்தன் கண்ணீர் பொழிய, சரீரம் வெதும்ப, எங்கும் வேர்ப்ப, ஊமைபோல ஒன்றும் பேசாமலும், போக முபலாமலும் சும்மா விருந்தான்.

அப்பொழுது இரசவாதி பொற்குகையை எடுத்து, மெல்லெனத் தனது வஸ்திரத்தினுள்ளே மறைத்துக் கொண்டு, அதுபோலத் தன்னிடத்திலிருந்த வேருெரு குகையைப் பக்கத்து வைத்து, புகையைத் தனித்து, தருமதத்தனை நோக்கி, 'இக்குகையை உன் கையினுல் எடுத்து, இவ்வக்கினிமேல் வைப்பாயாக', என்ருன். தருமதத்தன் அப்படிச் செய்தலும் இரசவாதி இதற் குரியன யாவற் றையும் அமைத்துச் சேமஞ்செய்து, தருமதத்தனை நோக்கி, 'நீ உணவில்லாமலும், ஒருவரோடும் பேசாமலும், பிறரைப் பாராமலும், மூன்று நாள் நம்மையே சிந்தித்துக்கொண் டிருக்கக்கடவாய். நாம் காளி சந்நிதியிலே ஒரு யாகம் முடித்தல் வேண்டும். முடித்துக்கொண்டு நாலாம்நாள் இங்கே வருவோம்', என்ருன். தருமதத்தன், 'அப்படியே செய்க,' என்று சொல்லி அவனை மும்முறை வணங்கி அவன்பின் செல்லாது நின்ருன்.

இரசவாதி அங்கு நின்றும் விரைந்து நெடுந்தூரம் போய், உருமாறி, வேருேரிடத்தை அடைந்தான். தரும தத்தன் இரசவாதி விதித்தபடியே இருந்து, மூன்று நாட் செல்லலும், 'பெரியவர் சொல்லிய நாளெல்லே சென்று விட்டதே! இன்று வந்திலர்; அவர் சொல் தப்புவாரா', என்று தளர்ந்து, காளி கோயிலினும் நகரத்தினும் அவனைத் தேடிக் காணுது மயங்கி வாடி, வீட்டுக்குத் திரும்பினுன்; முன் வைத்த குகையை எடுத்துப் பார்த்து, அது இரும்பா யிருக்கக் கண்டு, மிகுந்த துயரமடைந்து வீழ்ந்திறந்தான்.

3. பறவைகளின் முட்டைகள்

பறவைகள் கூடுகளின் தன்மைக்குத் தக்கபடி அவைகள் முட்டைகளின் வடிவத் தோற்றங்கள் மாறுபடுகின்றன. நாரை, கருடன், அண்டங் காக்கை, இராஜாளி முதலியவைகளின் முட்டைகள் பெரியவைகளாயும், மரங்கொத்திப் பறவை, தூக்கணாங் குருவி, காக்கை, வானம்பாடி, மீன்குத்திப் பறவை முதலியவைகளின் முட்டைகள் சிறியவைகளாயும், அவற்றின் கூடுகளின் பரிமாணத்திற்குத் தக்கபடி அமைந்திருக்கின்றன. மூடப்பட்ட கூடுகளிற் காணும் முட்டைகள் பளப்பளப்பாயும், திறந்தபடியிருக்கும் கூடுகளிற் காணும் முட்டைகள் இடத்திற்குத் தக்கபடி ஒளி மழுங்கியும், பற்பல நிறமுடையவைகளாயும் இருக்கின்றன. வெண்மையும் பளப்பளப்புமுள்ள முட்டைகள் மூடப்பட்ட கூண்டுகளில் உள்ளனவாகையால் அவை விரோதிகள் கண்களுக்குப் புலப்படா. திறந்தபடி யிருக்கும் கூடுகளிலுள்ள முட்டைகள் அந்தந்த இடத்திற்குத் தக்கபடி கறுப்போ, சாம்பல் நிறமோ, நீலமோ, கபில நிறமோ உள்ளவைகளாதலால் அவைகளும் அவற்றின் விரோதிகள் பார்வைக்கு மறைப்பட்டுக் கிடக்கின்றன. சில பறவைகள் தங்கள் முட்டைகளை வெளி யிடங்களிலேயே இட்டுவிடுகின்றன. அம் முட்டைகளின் நிறம் பற்பல விதமாய்ப் பேதப்பட் டிருக்கின்றது. ஆனால் அப்படிப்பட்ட முட்டைகளுக்கு வெண்மை நிறம் என்பதே கிடையாது. ஏனென்றால், வெளியிடத்திலுள்ள முட்டைகள் வெண்மை நிறமுடையவைகளாயிருந்தால் அவைகள் விரோதிகள் கண்களுக்கு வெகு சுலபத்தில் புலப்பட்டுவிடும். ஆகையால் அவைகளின் நிறமும் இடத்திற்குத் தக்கபடியே அமைந்திருக்கின்றது. மணலில் இடப்படும் முட்டைகள் மணல் நிறமும், வயலில்

இடப்படும் முட்டைகள் இலை நிறமும், பறவைகளில் கிடக்கும் முட்டைகள் அவை போன்ற நிறமும் உடையவைகளாகும்.

குயிற்பறவைகள் இடும் முட்டைகள் பற்பல நிறமுடையவை. அவைகளை நாம் காணும்போது அவை ஒரே இனப் பறவைகளின் முட்டைகளோவெனச் சந்தேகிக்க இடமுண்டாகும். ஒவ்வொரு குயிற் பறவையின் முட்டையும் தன் தன் அயற் பறவைகளின் முட்டைகள் எவ்வகை நிறமுடையவைகளோ அதே நிறத்தை யுடையவைகளாகும். குயிற் பறவைகள் தங்கள் முட்டைகளைத் தாங்களே அடைகாத்துப் பொரிக்கிறதில்லை; பக்கத்திலுள்ள மற்றப் பறவைகளின் கூடுகளில் தங்கள் முட்டைகளை அவைகள் இல்லாத சமயம் பார்த்து வைத்து விடுகின்றன. அப்பறவைகள் முட்டைகளெல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருப்பதால் வெகு சுலபத்தில் ஏமாற்றப்பட்டுப் போய்விடுகின்றன. நமது நாட்டில் குயிற் பறவைகள் தங்கள் முட்டைகளைக் காக்கைக் கூடுகளிற் கொண்டுபோய் வைக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். மனிதர் மனத்திற் கெட்டாத சர்வ வல்லமையுள்ள பராபரக் கடவுளின் அகண்டித ஞான சக்திக்குக் குயிற் பறவைகள் ஜீவிய சரித்திரமும் ஒரு சிறந்த உதாரணமே.

கூடு கட்டி வாழும் ஒரு பறவையின் முட்டையையும், பாறைகள் முதலிய வெளியிடங்களிலிருந்து காலங்கழிக்கும் ஒரு பறவையின் முட்டையையும் ஒரு மேசையின்மீது வைத்து உருட்டிப் பார்ப்போமானல் முன் சொன்னது உருண்டையா யிருப்பதால் உருண்டுகொண்டே போய்க் கீழே விழுந்துவிடும்; பின் சொன்னது ஒரு பக்கம் அடிகனத்துத் தட்டையாகவும், மற்ருெரு பக்கம் முனையோடிக்

கூராயும் இருப்பதால் ஒரு வட்டத்திற் சுழன்றுகொண்டே யிருக்குமே ஒழிய நேராய் ஓடிக் கீழே விழாது. கூடுகளில் இடப்படும் முட்டைகள் பாதுகாப்புடையவைகளாதலால் உருண்டையாயும், வெளியிடங்களில் காணப்படும் முட்டைகள் பாதுகாப்பற்றவை யாதலால் இயற்கையிலேயே அபாயம் நேரிட ஏது வில்லாத தன்மையை யுடையவைகளாயும் இருக்கின்றன. நமது வீட்டில் கோழிகள் இடும் முட்டைகள் பின் சொன்னவைகளைப் போலவே ஒரு பக்கம் முனையோடி யிருக்கின்றன. அதற்குக் காரணம் இப்போது உங்களுக்கே தெரியுமல்லவா?

பாறைகளின்மேல் பறவைகளிடும் முட்டைகள் உருண்டையாகவே யிருந்தால் அப்பறவைகள் பெருகிப் பல்குவதற்குச் சாத்தியமாகுமா? மேலும் பறவைகளின் முட்டைகள் இடத்துக்குத் தக்கபடி பற்பல வகையான நிறத்தை யுடையவைக ளாகாவிட்டால் தாய்ப் பறவைகளால் அவைகள் பத்திரமாகக் காப்பற்றப்படுமா? குயில் முட்டைகள் பற்பல விதமாகப் படைக்கப்படாவிட்டால் அவை வேறு பறவைகளின் கூடுகளிற் பொரிக்கப்பட்டுப் போய்விடுமா? இவ்விஷயங்களெல்லாம் அருத்தமற்ற ஆபாசங்களல்ல. யாவும் காரண காரிய தோரணையாகவே நிறைவேறுகின்றன. குயிற் பறவைகள் தங்கள் முட்டைகளைத் தாங்களே பொரித்துக்கொள்ளாமல் அயலிற் காணப்பட்ட வேறு பறவைகளின் கூட்டிற் கொண்டுபோய்ப் பொரிக்க வைப்பதற்குக் காரணம் யாதோ? நாம் இதுவரையிற் அதனைக் கண்டதில்லை. மனிதன் அறிவு இன்னும் அதுவரையில் எட்டவில்லை போலும்.

---

4. நன்னடக்கை

நன்னடக்கை என்பது நற்புத்தி, நற்குணம், தன் சுகத்தைத் துறந்தாயினும் பிறர்க்காகப் பாடுபடுதல் இவைகள் அடங்கிய ஒரு குணமாகும். இந்தக் குணம் திடீரென்று உண்டாகக் கூடியதன்று; சிறு வயதிலிருந்து பழக்கத்தினுல் உண்டாக வேண்டும். இஃது ஒருபொழுதும் சுலபமானதன்று. சிறுவயதி லிருந்தே உண்டானுல்தான் இந்தக் குணம் உடன் பிறந்ததாகும். இந்தக் குணத்தினுல் விளையும் நன்மை மிகவும் அதிகம்.

நன்னடக்கை நம்மிடம் இருக்குமாயின் பிரபுக்கள் நம்மைப் பார்க்கும் பொழுதே நமக்கு மரியாதை பண்ணுவார்கள். ஒரு மனிதனுடைய வித்தைகள் அவனுடன் பேசியே அறியவேண்டியவை; நன்னடக்கையோ அப்படி யன்று; முகக்குறியாலேயே தெரியவரும். மரியாதை என்பதற்குச் சிலர் தாழ்ந்து வந்தனம் பண்ணுவதென்றும், மேலுக்கு உபசாரம் செய்வதென்றும் அர்த்தம் கொள்ளுவார்கள். இவை நன்னடக்கை யாகா; மனப்பூர்வமான அபிமானத்துடன் செய்யும் மரியாதையும் கௌரவமும் உள்ள நடத்தையே நன்னடக்கை என்னப்படும்.

நற்புத்தி என்பதுதான் எப்பொழுதும் நன்னடக்கையை நிச்சயப்படுத்த வேண்டியதாய் இருக்கிறது. ஒரு காலத்தில் ஒரு மனிதரிடம் பேசும் பேச்சு மரியாதையாய் இருக்கலாம். அதே பேச்சு மற்ளுெரு காலத்தில் மற்ளுெருவரிடம் அவமரியாதையாய் இருக்கலாம். 'அப்பா, சௌக்கியமா?' என்று சில பேரை நாம் விசாரித்தால் அவர்கள் மரியாதையாய் நினைத்துக் கொள்வார்கள். நம்மை விட ஐசுவரியம் முதலியவைகளில் உயர்ந்தவர்களை நாம்

இப்படியே விசாரிப்போமேயானால் அவர்கள் நமக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாய் எண்ணுவார்கள் அல்லவா?

நன்னடக்கையுள்ள ஒருவன் மிகவும் மரியாதையுடன் அவரவர்களுக்கு ஏற்றபடி பேசுவான். பெரிய மனிதர்களுடைய வீட்டுக்குப் போனால் எந்த இடத்திற்போய் உட்காரவேண்டுமோ அந்த இடத்திலே போய் உட்காருவான். ஒரு சபையில் எல்லாரும் நின்றுகொண்டிருக்கத் தான் மட்டில் உட்காரமாட்டான். ஒரு போஜன பந்தியில் எல்லாருக்குமுன் காய்கனிகளைத் தான் ஒருநாளும் புசியான்.

உயர்ந்த நன்னடக்கை இவ்வுலகத்தில் ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டியது அவசியமே. அப்படியன்றிக் கடுகடென்றுவது, படபடவென்றுவது, கூச்சமாயாவது ஒரு மனிதன் இருப்பானேயானால் அவன் ஒன்றுக்கும் உதவான். நற்குணமும், வித்தையும் தங்கத்தைப்போல விலையுள்ளனவாய் இருக்கின்றன; அப்படி இருந்தபோதிலும் நல்ல மெருகுமட்டில் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் அவைகள் பிரகாசிக்க மாட்டா. ஆயினும், மெருகிட்ட பித்தளை மெருகிடாத பத்தரை மாற்றுத் தங்கத்தைவிட அதிகமாய் ஜனங்களைப் பகட்டுகிறதல்லவா? அதுபோலவே சிலர் எவ்வளவு மூடர்களாயும், துர்க்குணம் உள்ளவர்களாயும் உள்ளுக்குள் இருந்தபோதிலும் வெளிமரியாதை முதலியவைகளில் பகட்டாய் மின்னிக்கொண்டிருப்பதனால் சிலர் மனதைக் கவரக் கூடும்.

முதலாவது, நன்னடக்கை என்பதில் ஒவ்வொரு தேசத்திலிருக்கும் ராஜரீதி மரியாதைகளும் அடங்கி இருக்கின்றன. அவைகள் தெரியவேண்டியது அவசியமே. வியன்ன தேசத்தில் ஜனங்கள் தங்கள் அரசனுக்குச் சலாம் பண்ணுவதற்குப் பதிலாக நமஸ்காரம் பண்ணுகிறார்கள்.

பிரான்சு தேசத்தில் அரசன் கையில் முத்தங் கொடுக்கிறார்கள்; ஸ்பெயின், இங்கிலாந்து முதலான தேசங்களில் ஸலாம், கைக்கு முத்தம் இரண்டும் நடந்து வருகின்றன. இந்தப்படியே ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொருவிதமான மரியாதை நடந்து வருகின்றது. ஆனல், இந்த விஷயங்களில் நாம் செய்யவேண்டுவது என்னவென்றால், அந்தந்த ஊரில் இருக்கும் வழக்கப்படி அங்கங்கே நடந்தே தீரவேண்டும். "ஊருடன் கூடிவாழ்."

இரண்டாவது, ஒரு சங்கத்தில் நாம் போய் உட்காரும் பொழுது அதிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் தக்கபடி நாம் சரியாய் நடப்பதும் நன்னடக்கை யென்பதில் அடங்கியிருக்கிறது. சங்கமாய்ச் சேர்ந்து ஒரு பொது ஸ்தலத்தில் வெகு பெயர்கள் போய் உட்காரும் பொழுது அவர்களில் ஒவ்வொருவருக்கும் தாம் மற்றவர்களுடன் சமமாய் அந்த இடத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறேமென்னும் அபிப்பிராயம் வந்து விடுகிறதல்லவா? அவ்விடத்தில் யாரேனும் ஒருவருக்கு நீ மரியாதைக் குறைவாய் நடந்துகொண்டால், அது அவரை எவ்வளவோ அவமானம் பண்ணுவதற்குச் சரியாகும். ஒரு மனிதன் சங்கத்தில் உன்னுடன் பேச ஆரம்பித்துக்கொண் டிருக்கும்பொழுது நீ அவனைப் பற்றிப் பராமுகமா யிருப்பதாக ஜனங்களுக்குக் காட்டிவிட்டால் அது அவன் மனத்தை எவ்வளவோ பீடிக்கும்.

மூன்றாவது, நன்னடக்கை என்பதில் பல ஸ்தலத்திலும் உள்ள பல்வேறு மரியாதைகளும் அடங்கியிருக்கின்றன. ஒருவித வழக்கம் ஒரே கிராமத்தில் இரண்டு இடங்களில் வெவ்வேறாக இருக்கலாம்; இவைகளை நன்றாய் அறிந்து தக்கபடி நடக்கவேண்டியது அவசியம்.

கடைசியாக, நீ கைக்கொள்ளவேண்டிய தென்ன வென்றால். நீ எவ்வளவு படித்தாலும் நன்னடக்கை இல்லா விடில் உன் படிப்பெல்லாம் பூதங் காத்த புதையல் போல விளங்கவேமாட்டா. படிப்பில்லாமல் நன்னடக்கை மட்டில் உள்ளவனாக இருந்தால் அதுவும் சவத்துக்குச் செய்த அலங்காரம்போலத் தோன்றுமே யல்லாது வேறன்று. படிப்பும், நன்னடக்கையும் உன்னிடத்தில் கலந்து இருந் தால், நீ எல்லாரிடமும் மேன்மை பெற்று, 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்று ஜனங்கள் சொல்ல வாழ்வாய்.

ஆகையால், நீ நன்னடக்கை உடையவனாக ஒவ்வொரு விதத்திலும் முயற்சி செய்யவேண்டும்; ஒவ்வொரு சங்கத் திலும் நன்னடக்கையில் தேர்ந்தவர்கள் செய்யும் செய்கை களைக் கவனித்துப் பார்; அவைகளுக்கு மேலாக நீ செய்ய எத்தனப்பட வேண்டும். அப்படி எத்தனப்பட்டால்தான் நீ நன்னடக்கையுள்ளவன் என்று பல ராலும் புகழ்ந்து பேசப் படுவாய்.

---

5. படிக்காசுப் புலவர்

இப்பொழுது செங்கற்பட்டு ஜில்லாவென வழங்கும் இடம் முற்காலத்தில் தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. அந்நாட்டிலே பாலாற்றின் கரையிலே பொன் விளைந்த களத்தூர்என் னும்ஓர் ஊர் உண்டு. அவ்வூரிலேபுலவர் பலர் தோன்றித் தமிழ் மொழியை வளர்த்தனர். அப்படிப் பட்ட சிறந்த ஊரிலே, செங்குந்தர் குலத்திலே படிக்காசுப் புலவர் என்பவர் பிறந்தார். அவர் இளம்பருவத்திலேயே தமிழ் கற்கத் தொடங்கி மிகவும் ஊக்கத்துடன் கல்வி கற்றார்; எப்பொழுதும் ஏடுங் கையுமாகவே இருந்தார் ; கல்வி கற்

பதே அவருக்குப் பொழுது போக்காக இருந்தது; அவர் மெய் வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும், பிறர் அவமதிப்பைக் கொள்ளாமலும் தமது கருமத்திலேயே கண்ணுக இருந்து தமிழ் பயின்று வந்தனர்.

அவர் மேன் மேலுங் கல்வியிலே ஓங்கி விளங்க விருப்பங்கொண்டு பழைய சோழநாட்டைச் சேர்ந்ததும், இப்போது தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ளதுமாகிய திருவாரூருக்குச் சென்று வைத்தியநாத நாவலர் என்னும் பெரும்புலவரிடத்தில் அரிய பெரிய நூல்களையும், இலக்கணங்களையும் நன்கு கற்றுப் புலமை அடைந்தார். அவருக்குக் கல்வியிலே இருந்த அவாவும் ஊக்கமுமே அவரை முன்னுக்கு வரும்படி செய்தன.

இப்படிப்பட்ட புலவர் மணஞ் செய்து கொண்டு வாழ்ந்து வருங் காலத்தில் வறுமை நோயால் மிகவும் கவலையும் துன்பமும் அடைந்தார். அவர் காலத்திலே தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பவர் மிகுதியும் இல்லை. சேர சோழ பாண்டியர்களாகிய தமிழரசர்கள் தமிழை வளர்த்தது போலப் பின் வந்தவர்கள் செய்யவில்லை. அதனுல் புலவர்கள் மிகவும் துன்புற்ருர்கள். வறுமை ஒருவருக்கு உள்ள கல்வி யறிவையும், நுண்ணறிவையும் அழிக்கும்; அழகை ஒழிக்கும்; சொல்வன்மையைக் குறைக்கும்; ஒரு சபையிற் செல்லுவதற்கும் நாணத்தைக் கொடுக்கும்; மானத்தைக் கெடுக்கும் ; தானத்தைச் சுருக்கும். வறுமையுற்றவர்கள், 'ஐயோ! நெருப்பிலே படுத்துறங்கினுலும் உறங்கலாம் இக்கொடிய தரித்திரத்திலே கண்ணோடு கண்போட முடியவில்லையே,' என்று வருந்துவார்கள்; 'நேற்றுக் கொலைத் துன்பத்தைக் கொடுத்துச் சென்ற பாழும் வறுமை நாளைக்கும் வருமோ!' என்று அஞ்சுவார்கள். படிக்காசுப்

புலவரும் இத்தகையை வறுமை என்னுங் கடுநோயால் அடிக்கடி இடர்ப்பட்டவரே.

ஒருகால் இவர் மனைவி ஓர் ஆண்மகவைப் பெற்றனர்; அச்சிறு மகவுக்குத் தாய்ப்பால் பற்றவில்லை. தாய்க்கோ நல்ல உணவு கிடையாது. குழந்தைக்குப் பசுவின் பால் விலை கொடுத்து வாங்குவதற்கும் அவரிடத்திலே பொருளில்லை. இந்நிலையிலே புலவர் பெருங்கவலை கொண்டு வருந்தினர். அதனால் அவர் வல்லமா நகரத்துக்குப் போய்க் **காளத்தி முதலியார்** என்னும் வள்ளலைக்கண்டு,

> பெற்றாள் ஒருபிள்ளை என் மனையாட்டி அப் பிள்ளைக்குப் பால்
> பற்றாது; கஞ்சி குடிக்குந் தாமல்ல; பால் இரக்கச்
> சிற்றாளும் இல்லை; இவ் வெல்லா வருத்தமுந் தீர ஒரு
> கற்றா தரவல்லை யோ வல்ல மாநகர்க் காளத்தியே.

என்னும் அருமையான பாட்டைப் பாடினர். அதைக்கேட்டு முதலியார் உள்ளம் உருகினர்; புலவரைக் கட்டித் தழுவினர்; இன்சொல் கூறி அவருக்கு வேண்டிய பரிசுகளும், பாற்பசுக்களும், அவற்றைக் காப்பாற்றுதற்கு வேண்டிய பொருள்களும் வழங்கி அனுப்பினர்.

மற்றொருமுறை படிக்காசுப் புலவர் **இராமநாதபுரம்** தாலுக்காவில் உள்ள **சிவகங்கை** என்னும் நகரத்துக்குப் போனர். அப்போது அங்கே **திருமலைத் தேவர்** என்ற புகழ் பெற்ற வள்ளல் இருந்தனர். அவரைப் புலவர் போய்க் கண்டார். அச்செல்வர் அப்பொழுது யாதோ வேலையி லிருந்த படியால் புலவர்மேல் கோபங்கொண்டு அவரைக் கிளிக் கூட்டிலே அடைக்கும்படி காவலாளிகளுக்குக் கட்டளை யிட்டார். அவ்வாறே புலவரைக் காவலாளிகள் கிளிக்கூட்டுச் சிறையிலே அடைத்தனர். புலவர் அதிலே யிருந்து மிகவும் வருந்தினர்

பின்பு மறுநாள், திருமலைத்தேவர் அவ்விடத்துக்கு வந்தார். அதைக் கண்ட புலவர், 'இது நல்ல வேளை' என்று எண்ணி,

நாட்டிற் சிறந்த திருமலை யா,தங்க நாகரிகா,
காட்டில் வனத்தில் திரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னுமோர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்துவைத் தாய்இரை தாவென்று கூப்பிடுதே.

என்னும் அழகான பாட்டைப் பாடினர். அப்பாட்டைக் கேட்ட பிரபுசிகாமணி மிகவும் மனமகிழ்ந்து புலவரை விடுவித்து, அவருக்குத் தக்க பரிசுகளைக் கொடுத்து உபசரித்தனுப்பினர்.

---

6. மூன்று கோப்பைத் தண்ணீர்

I

சில வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்தில் ஒரு போர்வீரர் இருந்தார். அவர் பெயர் **பிலிப் சிட்னி.** அவர் நன்ருகப் படித்தவர்; பாட்டு அழகாகக் கட்டும் சக்தி உடையவர்; சங்கீதத்தில் கெட்டிக்காரர்; பந்தாட்டங்களில் வல்லவர்; குதிரைச் சவாரி செய்வதில் நிபுணர்; ஏழைகளிடத்தில் இரக்கம் உடையவர்; சண்டை செய்வதில் சமர்த்தர்.

ஒரு நாள் அப் போர்வீரர் ஒரு சண்டைக்குப் போனர். அவர் மிகத் தைரியமாகவும், வீரமாகவும் சண்டை செய்தார். ஆனல் பாவம்! அவர் கடைசியில் மிகவும் காயம் அடைந்தார். அவருக்குக் காயத்தினல் நோய் மிகவும் உண்டாயிற்று. அதனல் சுரமும் வந்து விட்டது. அப்போது, அவருக்கு நீர் வேட்கை மிகுதியும் உண்டாயிற்று. அவர் தம்முடன் இருந்த போர்வீரர்களை எங்கேயாகிலும் சென்று கொஞ்சம்

தண்ணீர் கொண்டுவரும்படி கேட்டார். அந்த இடத்தில் தண்ணீர் கிடையாது. அவர்மேலிருந்த அன்பினால் போர் வீரர்களில் சிலர் எங்கேயோ சென்று சிறிது தண்ணீர் கொண்டுவந்தார்கள். நீர் வேட்கை அதிகமாக இருக்கும் போது, நீர் அருந்தாவிட்டால் எவ்வளவு கஷ்டம் என்பதை எல்லோரும் அறிந்திருக்கலாம். மனிதர்கள் தண்ணீர் தாகத்தால் இறந்து போவதும் உண்டல்லவா?

பிலிப் சிட்னி என்பவர் தண்ணீர் வந்ததும், ஆவலோடு அதைக் குடிக்கப் போனார். அச்சமயம் அவர் அருகே வேறொரு போர்வீரன் காயமடைந்து கீழே விழுந்து கிடந்தான். அவனுக்கும் நீர் வேட்கை அதிகமாக இருந்தது. ஆனால், அவன் சாதாரண போர்வீரன். ஆகையால், அவனுக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பவர் ஒருவரும் இல்லை. அவன் பிலிப் சிட்னிக்கு வந்த தண்ணீரை ஆவலோடு பார்த்துக்கொண் டிருந்தான். ஐயோ பாவம்! அவன் இறக்குந் தறுவாயில் இருந்தான். அவன் அப்படிப் பார்ப்பதைப் பிலிப் சிட்னி என்பவர் அறிந்து தம் சிநேகிதர்களை நோக்கி, "சகோதரர்களே, நான் இறந்தாலும் இறக்கிறேன்; என்னைக் காட்டிலும் காயத்தாலும் தாகத்தாலும் துன்பப் படுகிற அப்போர்வீரனுக்கு எனக்குக் கொண்டு வந்த தண்ணீரைக் கொடுத்து விடுங்கள்," என்று சொன்னார். அவருடைய சிநேகிதர்களுக்கு அப்படிச் செய்ய இஷ்டமில்லை. ஆனால், பிலிப் சிட்னி அந்தத் தண்ணீரில் ஒரு துளியும் குடிக்காமல் மேற் கூறிய போர்வீரனுக்கே கொடுத்துவிட்டார். அப்படிக் கொடுத்துவிட்டுத் தாம் தண்ணீர் இல்லாமல் இறந்துவிட்டார். அவரைப்போல் நல்லவர்கள் உலகத்தில் எவர் இருப்பர்? அவருடைய பெருமையே பெருமை!

II

ஆஸ்டிரியா தேசத்தில் ஒரு சேனைத் தலைவர் இருந்தார். அவர் ஒரு சமயத்தில் தம் போர்வீரர்களோடு தண்ணீர் இல்லாத இடத்தில் அகப்பட்டுக்கொண்டார். அங்குத் தண்ணீருக்கு இருந்த அருமை பொன்னுக்கும் இல்லை. அப்போது அவர் போர்வீரர்களில் யாரோ ஒருவன் மிகவும் கஷ்டப்பட்டு அருமையாக ஒரு கோப்பைத் தண்ணீர் கொண்டு வந்து, அவர் கையில் கொடுத்தான். அவருக்கு அத்தண்ணீரைப் பார்த்தபோது எவ்வளவோ சந்தோஷமாகவே இருந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அந்நீரினை ஒரு துளியும் விடாமல் குடித்துவிட வேண்டும் என்னும் ஆசை அவருக்கு உண்டாயிருக்கலாம். ஆனால், அவர் அத்தண்ணீரைக் கையில் வாங்கிக்கொண்டு, மற்றவர்களைப் பார்த்து, "இப்படிப்பட்ட இடத்தில் ஒவ்வொருவருக்கும் தண்ணீர் அவசியம் வேண்டும். எனக்கு மாத்திரம்தானா வேண்டும்? எல்லோரும் கஷ்டப்படுகின்ற போது நான் மாத்திரம் இந்தத் தண்ணீரைக் குடிப்பதா? இவ்வளவு குறைந்த தண்ணீரை நான் எத்தனைப் பேருக்குக் கொடுப்பேன்!" என்று சொல்லித் தாம் ஒரு துளித் தண்ணீரும் குடிக்காமல், கொண்டுவந்த நீரைத் தரையில் ஊற்றி விட்டார்.

III

சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்னே டென்மார்க் என்னும் தேசத்துக்கும், ஸ்விடன் (Sweeden) என்னும் தேசத்துக்கும் சண்டை நடந்தது. டென்மார்க் தேசத்துப் போர்வீரர் ஒருவர் சண்டையில் சாயம் அடைந்தார். அவருக்குத் தாகம் அதிகமாக இருந்தது. எப்படியோ அவருக்கு ஒரு புட்டித் தண்ணீர் கிடைத்தது. அவர் அதைக் குடிக்க

மிக ஆவலோடு புட்டியை வாயின் அருகே கொண்டுபோனர். அப்போது அவன் விரோதிகள் பக்கம் சேர்ந்த ஒரு போர் வீரன் காயம் பட்டுத் தரையில் விழுந்து கிடந்தான். அவனிடம் இருந்து ஒரு கூக்குரல் கேட்டது. அதைக் கேட்டு, டென்மார்க் தேசத்தைச் சேர்ந்த மேலே சொன்ன போர் வீரர், "என்னைக் காட்டிலும் நீ தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறுய்; இந்த நீரைக்குடி," என்று சொல்லி அவனிடம் புட்டியைக் கொண்டுபோனர்.

அக்கொடியவன் கொஞ்சமேனும் இரக்கமும் நன்றியும் இல்லாமல், தன் சிறு துப்பாக்கியை எடுத்து மேற்கூறிய உத்தம வீரரைச் சுட்டான். அது தெய்வாதீனமாக அவர் தோளிற் பட்டது. அவர், முன் பட்டிருந்த காயத்தோடு மறுபடியும் காயம் அடைந்தும் அத்துரோகியைப் பார்த்து, "சகோதர, நீ நல்ல வேலை செய்தாய்! நான் உன்னிடம் சிநேகிதம் செய்திருந்தால், என்னைக் கொன்றுவிட்டு இருப்பாய். நல்லது நான் உனக்குப் புட்டியிலுள்ள நீர் முழுவதும் கொடுத்துவிடலாமென்று எண்ணியிருந்தேன். ஆனல், நீ அயோக்கியதை காட்டினபடியால் உனக்கு அரைப் புட்டி நீர்தான் கொடுப்பேன்," என்று சொல்லித் தாம் முதலில் அரைப் புட்டி நீர் குடித்துவிட்டு, மிகுதி அரைப்புட்டி நீரைத் தம்மைக் கொல்லவந்த அந்த அயோக்கியனுக்குக் கொடுத்தார். அவரது பெருங் குணத்தின் அருமைதான் என்னே! என்னே!!

7. ஓர் ஆடும் அதன் குட்டியும்—I

[ஓர் ஆட்டுக்குட்டி ஓரிடத்தில் கட்டப்பட் டிருக்கிறது ; அதன் தாய் அதைக் காண வருகின்றது.]

தாய் ஆடு—என் அருமைக் குழந்தாய், சுகந்தானா? எவருக்கும் யாதும் தீங்கில்லையே? எங்கே என் தங்கை? அவள் எங்குச் சென்றிருக்கின்றாள்? நான் அவ்வளவு கூறியும் அவள் உன்னைத் தனியே விட்டுச் சென்றனளே! அவளுக்கு இன்னும் அறிவு வரவில்லையே!—குழந்தாய், என்ன உன் முகம் மாறி இருக்கின்றது? தேகமும் சிறிது இளைத்தாற்போல் காண்கின்றது. எனக்கு உன்னைவிட்டுச் சிறிது நேரமும் பிரிய மனம் வரவில்லை. என் செய்வது! நான் வெளியே சென்று புல் மேய்ந்து வருவதற்குள் இங்ஙனம் இளைத்துவிட்டனை!

குட்டி ஆடு—அவ்விதம் ஒன்றும் இல்லை. அம்மா, ஓர் விசேஷம் தெரியுமோ உமக்கு! சிறிது நேரத்திற்கு முன்பு ஒருவன் தன் கையில் ‘பளபள’ வென்று மின்னும் ஓர் நீண்ட பட்டாக் கத்தியைத் தாங்கி நம் எஜமானனைக் காண வந்தான் அம்மா!—

தாய்—ஐயோ தெய்வமே! இதனால் யாருக்கு என்ன ஆபத்து நேரிடுமோ தெரியவில்லையே!

குட்டி—அம்மா, அதை நீங்கள் எனக்கு விளையாட வாங்கித் தருகின்றீர்களா? அது மிக நன்றாய் இருந்தது அம்மா!

தாய்—ஆ! குழந்தாய், என்ன வார்த்தை கூறினை! அதுவல்லவோ நமக்கு எமனாக இருக்கின்றது! அச்சொல்லைக் கேட்கும்போதே என் குடல் நடுங்குகின்றதே! கண்மணி பிறகு நடந்ததென்ன? சீக்கிரம் சொல்.

குட்டி—அம்மா! பின்பு அவ்விருவரும் ஏதோ மெதுவாகப் பேசிக்கொண்டார்கள். முடிவில் அப்புதியவன், என் சிற்றன்னையை அழைத்து, அவளை மஞ்சள் நீரால் நன்ருய்க் குளிப்பாட்டி, அவள் நெற்றியிலும், முதுகிலும் மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டான். அப்பொழுது அவள் மிக அழகாக இருந்தாள் அம்மா! ஆனால், எனக்கு மட்டில் ஒன்றுமே செய்யவில்லை அம்மா! இதுவாகிலும் தோஷமில்லை. பச்சைப் பசேலென்று இருந்த இளந்தளிர்களால் கட்டப்பட்ட வேப்பிலை மாலையை அவள் கழுத்தில் அவன் அணிந்தான். உடனே அவள், அதிக சந்தோஷத்தோடு தலையை ஆட்டிக்கொண்டே சென்ருள் அம்மா! அப்போது, 'நானும் உடன் வருகின்றேன்,' என்று அழுதேன். அதற்கு நமது எஜமானனுகிய இடையன் என்னைப் பிடித்திழுத்துக் கட்டிவிட்டான்.—அம்மா, எனக்கும் எப்போது அவ்விதம் செய்வார்கள்? எப்போது நானும் அவளைப்போலச் சந்தோஷமாக அவனோடு செல்வேன்? சொல் அம்மா—ஐயோ! ஏன் அம்மா அழுகின்றீர்கள்? எனக்கு அம்மாலையைப் போட வில்லை என்ரு அழுகின்றீர்கள்? அவன் மிக நல்லவன் அம்மா! எனக்கும் சீக்கிரத்தில் அவ்விதமே செய்வான்; அழ வேண்டாம் அம்மா!—

தாய்—ஆ! என் அரிய தங்காய், உனக்கும் இக்கதி வரும் என்று நான் கனவிலேனும் எண்ண வில்லையே!—ஐயோ! நற்குணமே ஓர் உரு எனக் கொண்ட உன்னைக் கொல்லுதற்கு அப்படுபாவிக்கு எங்ஙனம் மனம் துணிந்ததோ தெரியவில்லையே!— ஆ! தெய்வமே! இப்படியும் எங்களைத் துன்புறுத்தலாமோ? எங்கள் மீது உமக்கு இரக்கம் சிறிதேனும் இல்லையோ? நாங்களும் உமது புதல்வர்கள் அல்லவோ? ஐயோ! நோயினல் இறந்தாலும் பாதகமில்லை;

என் மனமும் ஒருவாறு ஆறிவிடும்.—ஆ! ஓர் கொலைப்பாதகன் தன் கூரிய கொடுவாளினால், இரக்கம் என்பது சிறிதும் இன்றி, என் தங்கையின் கழுத்தை வெட்டுவதென்றால் அப்போது அவள் என்ன பாடுபடுவாள்! அவள் நெஞ்சம் எவ்வாறு துடிக்கும்! அவள் கலக்கத்தினை நான் என்னென்று எடுத்துரைப்பேன்—ஐயோ ஈசனே! என் தமக்கை இறந்து இன்னும் ஒருவாரம் ஆகவில்லையே! அவளது அநியாயச் சாவிற்காக நான் மூன்றுநாள் ஆகாரம் இன்றி வருந்தினேனே—ஆ! என் கண்மணி, அருமைத் தங்கையே, நீ அன்றோ அச்சமயம் என் மனத்தைத் தேற்றினை? அவ்வளவு சமர்த்துடன் பேசிய நீ இன்று ஏமாறி விட்டனையே! —இல்லை; நீ அவன் தீய செயலை உணர்ந்து, 'நான் வரமாட்டேன்,' என்று மறுத்துக் கூறினும் அக்கொடியவன் உன்னை விட்டு விடுவானோ!—ஒருபோதும் இல்லை. ஐயோ! இப்படியும் உன் தலையில் ஈசன் எழுதி யிருந்தானே!

(கதறி அழுகின்றது.)

குட்டி—என்ன அம்மா! ஏதேதோ சொல்லி அழுகின்றீர்களே! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! அதை எனக்குச் சொல்லலாகாதா? என் சிற்றன்னைக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிட்டது? அவள் மிக்க சந்தோஷத்தோடு தானே சென்றாள்? அதற்காக நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? இன்னும் சிறிது நேரம் சென்றால் அவள் திரும்பி வந்து விடுகின்றாள்!

ஆடு—அந்தோ! குழந்தாய், உனக்கு ஒன்றும் தெரிய வராது. அவளா திரும்பி வரப் போகின்றாள்! எமன் கையிற் பட்ட உயிரேனும் மீளும்; அக்கொடியவனிடஞ் சென்றோரும் மீளுவதுண்டோ? அச்சண்டாளன் இத்தருணம் அவளை வெட்டிப் பலி யிட்டிருப்பானே! அவளும்

நமன் உலகை நாடி யிருப்பாளே! ஐயோ! தங்காய், அச் சமயம் நீ என்ன பாடு பட்டனையோ! உன் தேகம் அத் தருணம் எங்ஙனம் துடித்ததோ!

குட்டி—அம்மா, அவர்கள் அவளை ஏன் கொல்ல வேண்டும்? அவள் அவர்கட்கு என்ன தீங்கு செய்தாள்?

ஆடு—கண்மணி, அவளா தீங்கு செய்பவள்! அவள் சாந்தபூஷணி யல்லவா! சத்தியவசனி யல்லவா! அடக்கத் திற்கு அவளன்றோ உறைவிடம்! அறிவிற்கு அவளன்றோ களஞ்சியம்!

குட்டி—ஆனல், அவன் நம் எல்லோரையும் நீக்கி அவளைமட்டில் ஏன் கொல்லவேண்டும் அம்மா?

ஆடு—ஐயோ! அக்கொலை பாதகன் நம்மை மட்டில் விடவா போகின்ருன்? நம்மையும் ஒரு நாளைக்குக் கொல்லத் தான் போகின்ருன்.

குட்டி—அவர்கள் நம்மைக் கொன்று என்ன செய்கின் ருர்கள் அம்மா!

ஆடு—என்ன செய்கின்ருர்களா!—நன்ருகத் தின்னு கின்ருர்கள்.

குட்டி—ஈதென்ன அநியாயம்! நம்மையா தின்கின்ருர் கள்! நம் உடலையா தின்கின்ருர்கள்! அவர்கட்கு அது நாற் றம் எடுக்கவில்லையா? அவர்கள் எங்ஙனம் மனம் சகித்து அதை உண்கின்ருர்கள் அம்மா! தின்னுவதற்கு அவர்கட்கு வேறு ஒன்றும் அகப்பட வில்லையோ?

8. ஓர் ஆடும் அதன் குட்டியும்—II

ஆடு—ஐயோ! அவர்கள் நம்மைமட்டிலா தின்கின்றார்கள்! நாம் போதாமல், கோழி, புறா, காடை, கௌதாரி, மீன், நண்டு முதலிய யாவற்றையும் தின்னுகின்றார்கள்! இன்னும் சிலர், இவையும் போதாமல் மாடு, பன்றி முதலியவைகளையும் தின்னுகின்றார்கள். இதைச் சொல்லுவதென்றாலும் எனக்கு வாய் கூசுகின்றது.

குட்டி—அம்மா, மனிதர்கள் நம்மினும் மிக்க அறிவாளிகள் என்று பன்முறை நீங்கள் உரைத்திருக்கின்றீர்கள். அவர்களா இத்தகைய இழிவான, கருணை யற்ற காரியங்களைச் செய்கின்றனர்! அம்மா, நான் ஒரு நாள் நம் எஜமானன் குழந்தையின் காலைத் தெரியாமல் மிதித்துவிட்டேன். அதனால் காயம் ஒன்றும் நேரிட வில்லை. ஆனாலும், அவன் குழந்தை அதற்காக வருந்தியது. அப்போது, அவன் என்னை அருகி லிருந்த ஓர் புளிய மிலாறினால் என்ன பாடு படுத்தினான்! அவன் என்னென்ன கடுமொழிகள் கூறினான்!—அம்மா, நீங்களும் அச்சமயம், 'அவன் செய்தது நியாயம்தான்,' என்று கூறினீர்களே! அல்லாமலும், 'நாம் எல்லோரும் அவனுக்குக் குழந்தைகள்' என்றும், 'அவன் நம்மைத் தன் குழந்தைகளைப் போலப் பட்சமாகக் காப்பாற்றுகின்றான்,' என்றும் கூறினீர்களே! அங்ஙனமாயின் நம்மை உயிரோடு ஒருவன் நம் கழுத்தை அறுக்க அவன் சம்மதிக்கலாமா! அவன் குழந்தையை ஒருவன் தன் கூரிய கொடுவாளினால் அறுக்க முயன்றால் அவன் அதற்குச் சம்மதிப்பானா!—அம்மா, அவர்கள் நம் இறைச்சியை ஏன் தின்ன வேண்டும்? இதைவிட அவர்களும் நம்மைப்போல் பசும்புல் மேய்ந்து நீர் அருந்தலாமே!—ஆ! அதன் சுவை

அவர்களுக்குத் தெரிய வில்லையே! அப்போது, அவர்கள் நம்மினும் மிகக் கொழுத்துக் காணப்படுவார்களே! ஐயோ! ஓர் பிராணியைக் கொல்லுவது என்ன அறிவீனம்! இஃது அவர்களுக்குத் தெரிய வில்லையா? நம்மை உயிருடன் கொன்றுதானே தின்னுதல் வேண்டும்? நாம் இறந்த பின்பு தின்னலாகாதா? அவர்கள் என்ன கொடிய செய்கை செய்கின்றார்கள்! அம்மா, நாம் என் இன்னும் சும்மா விருத்தல் வேண்டும்? நாம் எல்லோரும் அவர்களை முட்டித் தள்ளலாகாதா? அவர்களுக்கு நாம் என் அடங்கி நடக்கவேண்டும்? கடவுள் கொடுத்த புல் இருக்கிறது; உள்ளங் குளிர உண்ணுகின்றோம்! அவர்கள் என்ன நம்மைக் காப்பாற்றுவது!—ஐயோ! எதிர்த்துத் தாக்க நமக்கு ஆயுதங்களையும் காணேமே! அவ்விதம் ஏதேனும் ஒன்று இருக்குமானால் அவர்கள் இவ்வாறு நம்மை அநியாயம் செய்வார்களா! அருகில் நெருங்குதற்கும் அஞ்ச மாட்டார்களா! அல்லையேல், அவர்கள் புலியைப் புசிக்கலாமே! சிங்கத்தைத் தின்னலாமே! அல்லது எவற்றினும் மிகப் பருத்திருக்கும் யானையைக் கொல்லலாமே—ஐயோ! கருணைநிதியான கடவுள் நம்மை இவ்வாறு படைத்தனரே!

ஆடு—கண்மணி, என் அருமைக் குழந்தாய், நீ ஒன்றும் அறியாமல் ஏதேதோ பிதற்றுகின்றாய். இங்ஙனம் தாறுமாறாகக் கருதுதல் பெரும்பிழையே யாகும். மானுடர் நம்மினும் மிக்க அறிவுடையவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் நம்மைக் கொன்று தின்பதனாலேயே அவர்களை அறிவில்லாதவர்கள் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாது. கண்மணி, 'நாம் என் அவர்கட்கு அடங்கி நடக்கவேண்டும்,' என்று நீ சிறிதும் அறிவில்லாமல் கூறினாய். அந்த எண்ணத்தை அறவே ஒழித்துவிடு. நீரையும் புல்லை

யும் கடவுள் உண்டாக்கி யிருப்பினும் பலவிடங்களில் நம்மை அழைத்துக்கொண்டு போய் அதைக் காலமறிந்து நமக்கு ஊட்டுபவன் யாவன் ? நம்மைத் தினந்தோறும் குளிப்பாட்டிக் கழுவுகிறவன் யாவன் ? வெயிலும், மழையும் நம்மைத் தாக்காவண்ணம் நமக்கு இடந்தந்து உதவுபவன் யாவன் ? நோய் வந்த காலத்து நமக்குப் பலவித சிகிச்சைகள் செய்து, அந்நோயைத் தீர்ப்பவன் யாவன் ? நம் அருமை எஜமானனாகிய இடையன் அன்றோ ? இன்னொன்று கூறுகின்றேன் : அதை நன்றாய்க் கவனி ; மானுடர் எல்லோரும் நம்மை வதை செய்து தின்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். இலக்ஷக் கணக்கான அறிவாளிகள் நம்மைக் கொன்று தின்னாமல் நம்மிடம் இரக்கங் காட்டி வருகின்றார்கள்.

குட்டி—அம்மா, நான் அறிவின்றி எல்லோரையும் தூஷித்துக் கூறிவிட்டேன் ; மன்னிக்க வேண்டும். அம்மா, இன்னொரு சந்தேகம் எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய பெருந்தகையோர் அந்த இழிவான குணமுடைய அவர்கட்குப் புத்தி புகட்டிப் புலால் உண்ணலை நீக்கலாகாதா ?

ஆடு—செல்வமே, நல்ல கேள்வியே கேட்டனை. நான் உன் புத்தியை மெச்சினேன். அவர்கள் அவ்விதம் செய்யாமல் இல்லை. இதற்காக எத்தனையோ புத்தகங்கள் எழுதி வெளியிட்டு வருகிறார்கள். எத்தனையோ உபந்நியாசங்கள் புரிந்து வருகிறார்கள். இதனால், எத்தனையோ புண்ணியவான்கள் புலால் உண்ணலை ஒழித்தும் வருகின்றார்கள். என்ன சொல்லியும் யாது பயன் ! எப்படியும் என் தங்கை திரும்பி வரப் போவதில்லை. ஆ ! இன்று காலை நான் அவளை விட்டுப் பிரியும்பொழுது, அவள் இறந்துவிடுவாள் என்று நான் சிறிதும் எண்ணவில்லையே ! இதற்குள் இம்மோசம் வந்துவிட்டதே ! ஐயோ—என் தங்காய், நீ அழகாக இருந்

தாயே ! உன்னைக் கொல்ல அவனுக்கு எங்ஙனம் மனம் துணிந்ததோ !

குட்டி—அம்மா, என்ன இது ! இவ்வளவு நேரம் எனக்குப் புத்தி புகட்டி, இப்பொழுது நீங்களே அழுவது நியாயமாகுமா? அழுவதால் பயன் என்ன ? அம்மா, இறந்தவர்கள் ஒருகாலும் திரும்புவதில்லை. கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் ஒருநாளும் நம்மைக் கைவிடமாட்டார். அழவேண்டாம் அம்மா !

---

9. இந்திய நாணயங்கள்—I

இந்தியாவில் நாணயங்கள் ஏற்பட்டுச் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களாகின்றன. அதற்குமுன் பண்டங்களைக் கொடுத்துப் பண்டங்கள் வாங்கினார்கள். இதற்கு இங்கிலீஷில் 'பார்ட்டர்' என்று பெயர். மாடு, கோழி, தானியங்கள் நாணயங்களுக்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டு வந்தன. ஆனதுபற்றியே கம்பர் முதலான புலவர்கள் 'மாடு' என்னும் பதத்தைச் 'செல்வம்' என்ற பொருளில் செய்யுட்களில் பிரயோகஞ் செய்திருக்கிறார்கள்.

நாணயம் அடிக்கப்பட்டதற்குக் காரண மென்னவென்று பார்ப்போம். சுமார் கி. மு. ஏழாவது நூற்றாண்டு முதற்கொண்டு இந்தியா தூரதேசங்களோடு வியாபாரஞ் செய்துகொண்டு வருகிறது. நாணயங்கள் முதலில் உண்டானதற்குக் காரணம் வெளிநாட்டு வியாபாரமே. இந்த வியாபாரத்தால்தான் நாணயங்கள் அடிப்பது அவசியமாயிற்று. இந்தியா வியாபாரஞ் செய்த தூர தேசங்களில் இத்தாலியா, பாபிலோன், எகிப்து முக்கியமானவை. ஆதிகாலத்து உரோம நாணயக் குவியல்கள் தென்னிந்தியாவில்

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள ஊதியூரிலும், வட இந்தியாவிலும் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன. உரோமாபுரி இத்தாலியா தேசத்திற்குப் பிரதான பட்டணம். தென்னிந்தியாவிலுள்ள பூர்விக இராச்சியங்களில் வெளிநாடுகளோடு முக்கியமாய் வியாபாரஞ் செய்தது ஆந்திர ராஜ்யம். அதற்கு அறிகுறியாக ஆந்திர நாணயங்களில் இரண்டு பாய்மரங்களுள்ள கப்பல்களை நாம் காணலாம். இவ்விதமாக வியாபாரத்தின் பொருட்டு, கி. பி. முதல் நூற்றுண்டு வரையில் இந்தியாவில் அடிக்கப்பட்ட நாணயங்கள் வியாபாரிகளாலேயும், பிரபுக்களாலேயும் அடிக்கப்பட்டனவே ஒழிய, அரசாங்கத்தாரால் ஒருநாளும் அடிக்கப்படவில்லை என்பதை நாம் நன்ருய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

முதல் முதல் அடிக்கப்பட்ட நாணயங்கள் கரடு முரடாயிருந்தன. இக்கால நாணயங்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! ஆதிகாலத்து நாணயங்கள் ஏன் அவ்வளவு அவலட்ச்ணமாக இருக்கின்றன என்ருல், அக்காலத்து ஜனங்களுக்கு முதலில் நல்ல நாணயங்கள் அடிக்கத் தெரியாது; வரவர ஜனங்கள் நாணயம் அடிக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டார்கள். முதலில் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த செம்பு முதலான உலோகத்தை உருக்கி, ஒரு கனமான தகடு ஆகும்படி ஊற்றினுர்கள்; பிறகு, அதைச் சம துண்டுகளாக வெட்டினுர்கள். ஒரு துண்டு சிறிது பெரிதாக இருந்தால் அதைக் கொஞ்சம் மூலையில் வெட்டிவிடுவது வழக்கம். இவ்விதமான புராதன நாணயங்களைக் காசிக்குச் சமீபத்தில் வெட்டி எடுத்திருக்கிருர்கள். இவ்வித நாணயங்களுக்குக் **கத்தரிக்கப்பட்ட நாணயங்கள்** என்று பெயர்.

பிறகு வழங்கப்பட்ட நாணயங்கள் ஒரே பக்கத்தில் அடிக்கப்பட்டவை. உலோகம் உருக்கப்பட்டு, உருகிய பதத்திலிருக்கும்போதே நாணயம் ஒரு பக்கத்தில் அடிக்கப் பட்டதால், அந்தப் பக்கம் பள்ளமாகவும், அதற்கு மறு பக்கம் மேடாகவும் ஆயிற்று. இவைகளுக்கு ஒரு பக்கத்தில் அடிபட்ட நாணயங்கள் என்று பெயர். இவை கி. மு. இரண் டாவது நூற்றாண்டில் வழங்கி வந்தனவென்று சொல்லலாம்.

நாளடைவில் நாணயங்களை இரு பக்கங்களிலும் அடிக் கும் விதத்தைக் கிரேக்கர், உரோமர் முதலான அந்நியரிட மிருந்து இந்தியர் கற்றுக் கொண்டார்கள். மகா அலெக் சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்த விஷயம் எல்லாருக் குந் தெரிந்திருக்கலாம். அவர் இறந்த பிறகு, அநேக கிரேக்கப் பிரதிநிதிகள் இந்தியாவின் வடமேற்கிலும், அதைச் சுற்றியுள்ள தேசங்களிலும் ஆண்டு வந்தனர். அவர் களில் மீனண்டர் என்பவன் ஒருவன்; அவன் பாக்டிரியா தேசத்து அரசன்; அவனுடைய நாணயங்கள் கிரீக் தேசத்து நாணயங்களைப்போல் வெகு அழகு வாய்ந்தவை; இரண்டு பாஷைகளில் எழுதப்பட்டவை. இம்மாதிரி நாணயங்கள் இந்தியாவிலும் அடிக்கப்பட்டன. ஆனால், பஞ்சாப் தேசத் திற்குக்கிழக்கிலுள்ள இந்தியாவின் மற்றப்பாகங்களில் வியா பாரிகளால் அடிக்கப்பட்ட பழைய நாணயங்களே வழங்கப் பட்டு வந்தன. ஆகையால்தான், அக்காலத்தில் அரசு புரிந்து வந்த அசோக வர்த்தனர் தம் பேரில் நாணயங்கள் அடிக்கவில்லை. பஞ்சாப்பில் வழங்கப்பட்ட மேற்சொல்லிய அழகுள்ள நாணயங்களும் நாளடைவில் கெட்டுப்போயின.

குஷான் நாணயங்கள்— கி. பி. முதலாவது நூற்றாண் டில் இந்தியாவின் வடமேற்கில் பிரசித்தி பெற்ற இராச்சியம் ஒன்றிருந்தது. அதுதான் குஷான் ராச்சியம். அதற்கு

முக்கிய பட்டணங்கள் இக்காலத்தில் காபூல், பிஷாவார் என்று வழங்கும் நகரங்களே. அக்காலத்தில் உரோம ராச்சியம் சிறிய ஆசியாவிலுள்ள யூபிரடீஸ் நதி வரையில் எட்டியிருந்தது. அது உரோமசக்ரவர்த்தி அகஸ்டஸ் காலம். இவருக்கும் இக் குஷானியருக்கும் போக்கு வரவு உண்டு. வியாபாரமும் பலமாய் நடந்தது. ஆகையால், குஷான் நாணயங்கள் உரோம நாணயங்களைப்போல் இரண்டு பக்கங்களிலும் முதல் முதல் அரசர்களால் அழகாக அடிக்கப்பட்டன. குஷான் வம்சத்தின் முதல் அரசர் முதலாவது காட்பீஷிஸ் என்பவர். இவருடைய நாணயத்தின் ஒரு பக்கத்தில் அரசர் தலையையும், மறுபக்கத்தில் அரசர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் கோலத்தையும் பார்க்கலாம். இவருக்கு அடுத்த அரசாகிய இரண்டாவது காபிஷிஸ் என்பவர் இதேமாதிரியான நாணயங்களை அடித்த போதிலும், உரோம நாணயங்கள் மாதிரியே முழுவதும் இருக்கக் கூடாதென்று எண்ணியே மறுபக்கத்தில் பரமசிவனையும், நந்தியையும் அடித்து விட்டார். அன்றியும், வடமொழியின் எழுத்துக்களும் இந்தப் பக்கத்தில் காணப்படுகின்றன. குஷான் நாணயங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், இந்தியாவில் கி. பி. முதல் நூற்றாண்டு முதல் நாணயங்கள் அரசர்களால் தங்கள் உருவத்துடனும், பேருடனும் அடிக்கப்பட்டன என்பதே யாகும்.

இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த காணிஷ்கா தம் தலை நகரங்களாகிய காபூல், பிஷாவார்களிலுள்ள தங்கசாலைகளில் பொன், செம்பு நாணயங்களை அடித்தார். இவர் நாணயத்தின் ஒரு பக்கத்தில் இவருடைய உருவம் போடப்பட்டிருக்கும். இவர் பக்கத்தில் ஒரு பீடத்தில் அக்கினி

எரிந்துகொண்டிருக்கும். இவர் அக்கினி ஆராதனை செய்கிற விதத்தை இவர் நாணயத்தில் நாம் காணலாம். இவருடைய தாடி நீண்டும், உதடு தடித்து மிருக்கும். மறு பக்கத்தில் சில நாணயங்களில் புத்தர் தம் மதத்தைப் பிரசங்கஞ் செய்கிறதுபோல் காண்பிக்கப்பட்டிருக்கிறது. சிலவற்றில் சூரியன், சந்திரன் முதலிய நானாவித உருவங்கள் போடப் பட்டிருக்கின்றன. இவைகளால், இவர் ஆரிய வம்சத்தில் தோன்றினவரென்றும், முதலில் அக்கினி ஆராதனை செய்தாரென்றும், பிறகு பௌத்த மதத்தைத் தழுவி, அதைச் சிரத்தையுடன் ஆதரித்தாரென்றும், பிறமதஸ்தரிடத்தில் துவேஷம் பாராட்டவில்லை என்றும் தெரிகின்றன. இவருக்குப் பின்பு, பட்டத்திற்கு வந்த வாசுதேவர் தம் நாணயத்தின் மறு பக்கத்தில் சிவனையும் நந்தியையும் மறுபடியும் போட்டுவிட்டார். பிற்காலத்தில் குஷான் நாணயங்கள் கெட்டுப்போயின.

குப்த நாணயங்கள்—குஷான் ராஜ்யம் சீர்குலைந்த பிறகு, இந்தியாவில் ஒரு பெரிய இராச்சியமுண்டாயிற்று. அதற்குக் **குப்த ராஜ்யம்** என்று பெயர். இதன் முக்கிய அரசன் **விக்கிரமாதித்தன்**. இவனுடைய நாணயங்கள் குஷான் நாணயங்களைப் போலவே அடிக்கப்பட்டன. நாணயத்தின் ஒரு பக்கத்தில் அரசன் நின்றுகொண்டிருக்கிற உருவத்தைக் காணலாம். மறுபக்கத்தில் இலட்சுமி தாமரை மலர் மேல் வீற்றிருப்பதைப் பார்க்கலாம். விக்கிரமாதித்தனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த **சந்திரகுப்தன்** தென்னிந்தியாவின்மேல் படை எடுத்து ஏராளமான பொன்னைக் கொண்டு வந்து நாணயங்களும், பதக்கங்களும் அடித்தான். இவனுக்குச் சங்கீதத்தில் மிகப் பிரியம். ஆகையால், இவன் நாணயத்தில் ஒரு பக்கத்தில் இவன் உட்கார்ந்து வீணைவாசிக்

கிறதுபோல் போடப்பட் டிருக்கும். மறுபக்கத்தில் இலட்சுமி தாமரை மலரில் உட்கார்ந்திருப்பதைக் காணலாம். இவன் தென்னிந்தியாவின்மீது படை யெடுத்து அநேக தேசங்களை ஜயித்தான். இதைக் கொண்டாடும் பொருட்டும், எல்லா அரசர்களையும்விடத் தான் மேம்பட்டவன் என் பதை அறிவிக்கும் பொருட்டும், இவன் அசுவமேதயாகம் செய்ததை மேற்சொல்லிய இவனது பதக்கங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். குப்த நாணயங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது: குப்த அரசர்கள் சமஸ்கிருத பாஷையைப் பரிபாலித்து வந்தார்கள். அவர்கள் காலத்தில் காளிதாசன் போன்ற அநேக சமஸ்கிருத வித்வான்கள் இராஜசபையில் இரத்னங்கள்போல் விளங்கினார்கள். குப்த நாணயங்களில் சுத்தமான சமஸ்கிருத எழுத்துக்கள் அடிக்கப்பட் டிருக்கின்றன. இந்த இராச்சியம் வெள்ளை ஹன்ஸ் ஜாதியரின் படை எழுச்சியால் சீர்குலைந்தது; நாணய வகைகளும் கெட்டுப் போயின. ஆனாலும், ஒரு பக்கத்தில் தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் இலட்சுமியின் உருவம் வெகுகாலம் வரையில் வட இந்தியாவில் ஆண்ட இந்திய அரசர்களாலும், பின்பு படையெடுத்துவந்த மக மதிய அரசர்களாலும் கையாளப்பட்டு வந்தது. ஆனால், இந்திய அரசர்கள் மறுபக்கத்தில் தங்களுடைய பெயரை யும், பட்டத்தையும் அடித்து வந்தார்கள்.

---

10. ஒதல்லோ—I

வெனிஸ் என்றும் அழகிய நகரில் பேராற்றல் வாய்ந்த ஒரு போர்வீரன் இருந்தான். அவன் வட ஆபிரிக்கா தேசத்திலிருந்து அந்நகருக்குப் பிழைக்கச் சென்றவன்.

அப் போர்வீரன் கறுப்பு நிறம் வாய்ந்தவன். பார்வைக்கு அழகாகத் தோன்றான். ஆனால், இராஜ விசுவாசத்தி லும், பெருந்தன்மையிலும் மிகச் சிறந்தவன். அவன் ஒதல்லோ என்னும் பெயர் பூண்டிருந்தான்.

ஒதல்லோ பல போர்களுக்குச் சென்று, பல வெற்றி கள் அடைந்து, பரந்த புகழ் பெற்றான். ஓர் இளமாது அவன் போராற்றலைக் கேட்டு அவனை வியந்தாள். அவள் ஒரு பெரிய செல்வவந்தர் பெற்றெடுத்த பொற்கொடி யாவள். அவள் பெயர் டெஸ்டிமோனா என்பதாகும். அம்மாதின் தந்தையர் அரசாங்கத்தில் மிக்க பொறுப்புள்ள ஓர் அங்கத்தினராக இருந்தார்.

மேற்கூறிய மாதின் அழகை வர்ணிக்க ஒருவராலும் இயலாது. அவ்வாறிருந்தும் அவள் அந்நிய தேசத்து மிகக் கரிய நிறமுள்ள அழகற்ற ஆடவனை எவ்வாறு காத லித்தாள் என்பது எல்லோருக்கும் வியப்பாகவே தோன் றும். ஆனால், அவள் சிறந்த அறிவும், பரந்த உள்ளமும் பெற்றவள். ஆதலால், அப்பாவை பார்வைக்கு அழகாகத் தோன்றும் மேற்போர்வையாகிய மக்களின் தோலின் அழகைப் பொருட்படுத்தவில்லை. அவள் குணவழகையே உண்மை அழகாக மதித்தாள். அவளை மணக்க அநேக செல்வம் மிக்க இளைஞர்கள் விரும்பினார்கள். ஆனால் அவள், அவர்கள் ஒருவரையும் தனக்குத் தகுந்த நாயக னாக எண்ணவில்லை.

அப்பாவை குணவழகும், செயலழகும் ஒருங்கே பெற்ற ஒதல்லோ என்னும் வீரனையே மணக்க விரும்பினாள். ஒதல்லோ தான் போர்புரிந்த யுத்தங்களின் வரலாறுகளையும், அவற்றில் தான் உயிர் பிழைத்து வந்த அற்புதங்களையும்

அவளுக்கு மிக அழகாக எடுத்துச் சொல்லுவான். அவள் அவற்றைக் கேட்டு மிகவும் களிகூர்வாள்.

ஒருநாள் இரவு அவள் தந்தையார் உறங்கிக்கொண்டிருக்கையில், இரண்டு பணியாட்கள் அவரை எழுப்பினர்கள். அவர் எழுந்ததும், அவர் புதல்வி ஒதல்லோவுடன் ஓடிப் போய்விட்டாள் என்று அவரிடம் கூறினர்கள். பிரபான்ஷியோ என்னும் அச்செல்வருக்கு அப்போது உண்டான கோபத்திற்கு அளவேயில்லை. அவர், தாம் இத்துணைய உயர்ந்த நிலையிலிருந்தும், தம் புதல்வி கேவலம் ஓர் ஆபிரிக்கா தேசத்துக் கரியனுக்கு வாழ்க்கைப் பட்டாளே என்று மனம் தத்தளித்தார். அவர் ஒதல்லோவின் வீரச் செயல்களையும், விழுமிய குணங்களையும் நன்கு அறிந்திருந்தும், அவற்றை அவரும் ஒருவாறு வியந்திருந்தும், அவனைத் தமக்கு மருமகனுகக் கொள்ள மாத்திரம் அவருக்கு மனம் துணியவில்லை.

பிரபான்ஷியோ நியாயாதிபதியினிடம் தன் புதல்வியின் வழக்கைக் கொண்டு போனர். ஒதல்லோ டெஸ்டிமோனவை நீதிமுறை வழுவாமல் திருமணம் புரிந்ததை மிகத் தைரியமாக எடுத்து விளக்கினன். அம்மாதும் நியாயாதிபதியினிடம் தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட காதலன் அவனே என்றும், அவனை யன்றி வேறு கணவனைத் தான் விரும்ப வில்லை என்றும் தைரியமாகச் சொல்லிவிட்டாள். அவள் தந்தையார் வெட்க மடைந்து வீடு சென்ருர். அவர்கள் திருமணம் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

அன்றிரவே ஒதல்லோ சைபிரஸ் என்னும் தீவிற்கு அமர்புரியச் செல்ல வேண்டியதாயிற்று. துருக்கியர்கள்

அத்தீவைப் பிடிக்கப் படையெடுத்து வந்தார்கள். ஒதல்லோ விற்கு இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் ஐயாகோ; மற்றொருவன் பெயர் காசியோ. ஐயாகோ கபடம், வஞ்சனை, தந்திரம், பொறாமை முதலிய தீயகுணங்கள் உடையவன். காசியோ கருணை, வாய்மை, நன்றி முதலிய நற்குணங்கள் வாய்ந்தவன். அவனை மற்றவர்கள் எளிதில் ஏமாற்றிவிடலாம். அவன், எல்லோரும் தன்னைப் போலவே களங்கமற்றவர்கள் என்று எண்ணிக் கொள்வான். ஒதல்லோ அவர்கள் இருவரையும் சிறந்த நண்பர்களாகவே நேசித்து வந்தான். ஆனால், காசியோ என்பவன் பெருங் குணத்தை அவன் பெரிதும் வியந்தான். அவர்கள் இரு வரும் தன்னுடன் இராணுவத்தில் தனக்குக் கீழ் உத்தி யோகம் செய்பவர்கள். ஒருசமயம் ஒதல்லோ காசியோ என்பவனைத் தனக்கு உதவிப் படைத் தலைவனாக நியமித் துக் கொண்டான். அவன் அவ்வாறு செய்தது ஐயாகோ விற்குப் பெரிய கோபத்தை உள்ளுக்குள் உண்டு பண் ணிற்று. அவன் அந்த உத்தியோகம் தனக்கு வருவது தான் நியாயம் என்று நினைத்தான். ஆனால், அவன் தன் வெறுப்பை வெளிப்படக் காட்டவில்லை.

ஒதல்லோ எல்லோருக்கும் முதலாகச் சைபிரஸ் தீவிற் குச் செல்லவேண்டியவனாக இருந்தான். ஆதலால், அவன் ஐயாகோவைத் தன் உண்மை நண்பனாக எண்ணித் தன் அருமை மனைவியை அவன் மனைவியுடன் விட்டுச் சென்றான். ஐயாகோ தன் மனைவியையும், ஒதல்லோவின் மனைவியையும் அழைத்துக் கொண்டு வேறு ஒரு கப்பலில் மேற்கூறிய தீவிற்கு ஒதல்லோவின் பின் சென்றான். காசியோ என்பவனும் தனிமையாக ஒரு கப்பலில் அத்தீவிற்கே சென்றான்.

11. ஒதல்லோ—II

காசியோ எல்லோர்க்கும் முன்பாக மேற்கூறிய தீவை அடைந்தான். பின்னர் ஐயாகோவின் கப்பல்போய்ச் சேர்ந்தது. கடைசியாக ஒதல்லோ பெரும்புயலில் அடிபட்டு மிக்க கஷ்டத்துடன் அத்தீவை அடைந்தான். அவர்கள் அனைவரும் அங்குச் சேர்ந்ததும், துருக்கியர் கப்பல்கள் அனைத்தும் புயலால் உடைபட்டதென்று கேள்வியுற்றார்கள். ஒதல்லோ மிக்க களிப்புற்று, மனவமைதியுடன் தன் மனைவியினிடம் சென்றான். அவன் அன்றிரவு காசியோவை அழைத்துத் தன் போர்வீரர்கள் எத்தகைய தீய செய்கையும் செய்யாமல் ஒழுங்காக இருக்குமாறு அவனைக் கவனிக்கும்படி கட்டளையிட்டான்.

ஐயாகோ அதுதான் நல்ல சமயம் என்று எண்ணி நயமான மொழிகளால் காசியோவை முழுக் குடியில் அமிழ்த்துவிட்டான். பாழான குடிக்கு அடிமைப்பட்டவன் கீழான செய்கையை ஏன் செய்ய மாட்டான்! குணக்குன்றெனப் பெயர் வகித்த காசியோவும் தன்னை மறந்து, அத்தீவின் கவர்னரையே கத்தியால் குத்திவிட்டான். ஒதல்லோ அச்சமயம் அங்கு வந்தான். ஐயாகோ காசியோவின் நடத்தையைத் தந்திரமாக விளக்கிக் காட்டினான். ஒதல்லோ மிகவும் வெறுப்புற்றுக் காசியோவை வேலையினின்றும் நீக்கிவிட்டான். ஐயாகோ தான் கொண்ட ஒரு கருத்துநிறைவேறிற்று என்று எண்ணிக் களித்தான்.

டெஸ்டிமோனா எப்போதும் காசியோவினிடம் களங்கமில்லாமல் களிப்பாகப் பேசுவது வழக்கம். அவள் அத்துணைக் களங்கமின்றி ஐயாகோவினிடம் பேசுவதில்லை. ஐயாகோ அக்காரணத்தாலும் காசியோவை வெறுத்து

வந்தான். காசியோ வேலையினின்றும் நீக்கப்பட்டதும், டெஸ்டிமேனுவினிடம் சென்று, தன்னை எவ்வாறேனும் வேலையில் மறுபடியும் வைத்துக்கொள்ளுமாறு தன் கணவனிடம் சொல்லுமாறு, அவளைக் கேட்டுக்கொண்டான். அம்மாது அவ்வாறே தன் கணவனைக் கேட்டாள். ஐயாகோ பழிபாவத்திற்கு அஞ்சாத சண்டாளன். அவன் உடனே அம்மங்கை காசியோவைக் கள்ளத்தனமாகக் காதலிக்கின்றாள் என்றும், அக்காரணத்தால்தான் அவள் அவன் நலத்தைக் குறித்துப் பேசுகின்றாள் என்றும் ஒதல்லோவினிடம் மறைவாகக் கூறினான்.

ஒதல்லோ மிகவும் நற்குணமும், நற்சிந்தனையும் உடையவனாக இருந்தும், வஞ்சகக் கள்வனாகிய ஐயாகோவின் சொல்லை ஒருவாறு நம்பினான். அவனுக்குத் தன் மனைவி ஒழுக்கத்தில் தவறினாள் என்று நிச்சியமாகத் தெரியாமல் இருந்தபோதிலும், சந்தேகம் என்னும் பாவி அவன் உள்ளத்தில் குடிபுகுந்தான். ஒதல்லோ நல்லுணவையும், நித்திரையையும் இழந்தான். அவன் ஒருநாள் தலைவலிக்கின்றது என்று முகவாட்டமாக மனத்தில் தீய எண்ணங்களுடன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தபோது, அவன் புனிதகுண மனைவி அவனை நோக்கி, "அருமை நாயக, தங்கள் தலைவலியையும், மனக்கவலையையும் இந்தக் கைக்குட்டை நீக்கிவிடும். இதை வைத்துக்கொள்ளுங்கள்," என்று கூறி அக்கைக்குட்டையை அவனிடம் அளித்தாள். அவன் அதைக் கோபத்துடன் கீழே எறிந்துவிட்டான்.

மேற்கூறிய கைக் குட்டையை ஒதல்லோ தன் மனைவிக்குக் கொடுத்திருந்தான். அதற்கு அற்புத சக்தி இருப்பதாக அவன் எண்ணினான். அதாவது, அதை வைத்திருக்கும்

வரையில் ஒரு மங்கைக்குத் தன் கணவன் அன்பு ஒரு தினையளவும் குறையாது என்பதாகும். அவள் அதை எவ்வளவு அதிகமாகப் போற்றிப் பாதுகாக்கின்றாளோ அவ்வளவு அதிகமாக அவள் தன் கணவனைப் போற்றுகின்றாள் என்பதும் அவன் கருத்தாகும். மேற்கூறிய கைக்குட்டை கீழே விழுந்த சமயம் பார்த்து ஐயாகோ தன் மனைவி எமிலியாவைக் கள்ளத்தனமாக அதை எடுத்துத் தன் கையில் கொடுக்குமாறு சொன்னான். ஐயாகோ அதை வாங்கிக்கொண்டு, காசியோவினிடம் சென்று, மிகச் சிறந்த நண்பன்போல் அதை அவனிடம் பரிசாக அளித்தான். அவன் வஞ்சனையை அறியாத காசியோ அதைத் தான் விரும்பிய ஒரு மங்கைக்குப் பரிசாக அளித்தான். ஐயாகோ தன்னுடன் ஒதல்லோவை இரகசியமாக அழைத்துக் கொண்டு போயிருந்தான். ஒதல்லோ காசியோவினிடம் தன் மனைவியின் கைக்குட்டை போலிருந்ததைக் கண்ணாரக் கண்டதும், தன் மனைவி கற்பிழந்தாள் என்று நிச்சயமாக எண்ணிக் கொண்டான்.

ஒதல்லோ ஆற்றொணுத் துயருடன் தன் மனைவியின் படுக்கை அறைக்குள் சென்றான். அவள் நித்திரை புரிகையில், அவளுக்கு ஒரு முத்தம் அளித்தான். அக்களங்கமற்ற மாது விழித்துக்கொண்டாள். அவன் அவளை நோக்கி, "மாசுள்ள மாதே, உன் உண்மைக் காதலன் காசியோ என்பதை உணர்ந்தேன்; நீ ஈசன் திருவடியில் பத்தி வைப்பாயாக," என்று கூறி, அவள் முகத்தைப் படுக்கையிலுள்ள ஆடைகளால் மூச்சுவரவொட்டாமல் மூடி, அவள் இன்னுயிரை நீக்கினான். புனிதம் நிறைந்த அச்சிறு மங்கை தன் கற்பின் தூய்மையை எவ்வளவு சொல்லியும் அவன் நம்பவில்லை.

அச்சமயம் ஐயாகோவின் மனைவி எமிலியா ஒதல்லோ இருந்த அறைக்குள் வந்தாள். அவள் தன் கணவன் செய்த வஞ்சனையைக் கூறி, டெஸ்டிமோனு ஒதல்லோவை எவ்வளவு உண்மையாகக் காதலித்தாள் என்பதையும் மொழிந்தாள். ஐயாகோ திடீரென்று அங்குத் தோன்றினான். அவன் தன் வஞ்சனையை வெளியாக்கிய தன் மனைவியைக் கத்தியால் குத்தினான். அவள் விழுந்து மடிந்ததும், அவன் வெளியே ஓட்டம் பிடித்தான். ஆனால், ஒதல்லோவின் நண்பர்கள் அவனைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். ஒதல்லோ ஐயாகோவைக் கத்தியால் குத்தினான். ஐயாகோ காயமடைந்தான்.

பின்னர் ஒதல்லோ அடக்க முடியாத வருத்தத்துடன் தன் மனைவியைக் கடை முறையாகப் பார்த்து, "உத்தமி, உன்னைப் பழுதாக நினைத்த இப்பாவி பூமியில் இன்னும் இருப்பதா?" என்று கூறித் தன்னைத் தானே குத்திக் கொண்டு, தன் கற்புள்ள மனைவியின் அருகே விழுந்து மாண்டான்.

---

12. இந்திய நாணயங்கள்—II

மகம்மதிய நாணயங்கள்—மகம்மது இறந்து அறுபத்து நான்கு வருஷங்கள் சென்ற பிறகு மகம்மதிய நாணயங்கள் 'டமாஸ்கஸ்' என்னும் நகரத்தில் அடிக்கப்பட்டன. அவைகளில் கொரானிலிருந்து எடுக்கப்பட்ட பக்தியுள்ள சிறு வாக்கியங்கள் அடிக்கப்பட்டனவே ஒழிய யாதொரு விதமான உருவங்களும் அடிக்கப்படவில்லை. இந்தியாவில் முதல் முதல் அடிக்கப்பட்ட மகம்மதிய நாணயங்களிலிருந்து மகம்மதிய கவர்னர்களின் பெயரும், அடிக்கப்பட்ட பட்டணங்களின்

பெயரும் நாம் அறிந்து கொள்ளலாம். ஆனால், இந்துக்கள் தங்கள் நாணயங்களை உபயோகித்தார்களே யன்றி, மகம் மதிய நாணயங்களை உபயோகிக்க வில்லை.

மகம்மது கஜினி நாணயங்கள் — இவைகளிலுள்ள எழுத்துக்கள் சமஸ்கிருதம்; போடப்பட்ட உருவங்கள் எருதும் குதிரைக்காரனும். இந்துக்களைத் திருப்தி செய்ய வேண்டியே அம் மகம்மது இப்படிச் செய்தான் என்று தெரிகிறது.

மகம்மது கோரி நாணயங்கள் — இவை, கஜினி நாணயங்களைப்போல் இருந்தாலும், துலுக்கு, சமஸ்கிருதம் ஆகிய இரண்டு பாஷைகளும் இவைகளில் எழுதப்பட்டன. நாணயமும் இவ்விதமே.

அல்லாவுதின் நாணயங்கள் — இவை முக்கியமாய் வெள்ளி செம்புகளால் அடிக்கப்பட்டன. இவனுடைய குமாரன் இந்து ராஜாக்களைப்போல் தன் நாணயங்களைச் சதுரமாக அடித்தான். இம்மாதிரியான நாணயங்கள் ஷாஜஹான் சக்ரவர்த்தி காலம் வரையில் அடிக்கப்பட்டன.

முகம்மது டோக்ளாக் நாணயங்கள் — இவைகள் மிக அழகானவை. இவன் ஏராளமான பித்தளை நாணயங்களில், 'எவன் சுல்தானுக்கு உண்மையில் கீழ்ப்படிகிறானோ அவன் சுவாமிக்கும் கீழ்ப்படிகின்றான்,' என்று அடித்து அவைகளை வெள்ளி நாணயங்களாக மதிக்கும்படி தன் குடிகளைக் கட்டாயப் படுத்தினான். எவ்வளவு கட்டாயப் படுத்தியும் ஜனங்கள் அவைகளை மதிக்கவில்லை. ஆகையால், அவன் இறந்த பிறகும் நாணயங்கள் அரண்மனையில் மலைமலையாகக் குவிக்கப்பட்டிருந்தன. இவனுக்குப் பின் வந்த வம்சத்தார்களின் நாணயங்கள் சிறப்பில்லாதவை.

ஷர்ஷா நாணயங்கள்—ஷர்ஷா, நாணயங்களைத் திருத்தினன். இவனுடைய வெள்ளி ரூபா அநேகமாய்த் தற்காலத்துச் செலவாகும் கீழ் இந்திய வாணிபச் சங்கத்தாரின் ரூபாவை ஒத்திருக்கிறது. ஆங்கில அரசாங்கத்தாரது ரூபாவைப் போலவே நூற்றெழுபத்தைந்து நெல்லெடையுள்ள வெள்ளியும், ஐந்து நெல்லெடையுள்ள செம்பு முள்ளது; அரசனுடைய பெயர் நாகரிக எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது; மற்ற விஷயங்கள் அராபியில் எழுதப்பட்டுள்ளன.

அக்பர் நாணயங்கள்—இவைகள் ஷர்ஷா நாணயங்களைப் போன்றவை. அக்பர் தமது அரசாட்சியின் பதின்மூன்றும் வருஷத்தில் மகம்மதிய மதத்தை விட்டுத் தெய்விக மதத்தைத் தழுவினர். அக்காலத்தில் இவர் போட்ட நாணயங்களில், 'அல்லாஹு அக்பர்', என்று அடிக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் 'சுவாமி பெரியவர்,' அல்லது 'அக்பர்தான் சுவாமி,' என்பது பொருள். இவர் சந்ததியாரும் கொரானுக்கு விரோதமாகப் பின்பற்றித் தங்கள் நாணயங்களில் சித்திரவேலை செய்ய ஆரம்பித்தனர்.

ஜிஹாங்கீர் நாணயங்கள் — இவருக்குக் குடியிலும், அழகிற் சிறந்த தமது மனைவி நூர்ஜிஹானிடத்திலும் பிரியம் அதிகம். இதை இவர் நாணயங்கள் நன்குய் விளக்குகின்றன. நாணயங்களின் ஒரு பக்கத்தில் நூர்ஜிஹானும், மற்றொரு பக்கத்தில் இவர் சாராயக் கோப்பையைக் கையிலேந்தி வாயில் வைத்துக் குடிக்கிறது போன்ற உருவமும் போடப்பட்டு இருக்கும்.

ஷாஜஹான் நாணயங்கள்—இவை தங்கம் வெள்ளி செம்புகளினல் அடிக்கப்பட்டன; ஜிஹாங்கீர் நாணயங்களிலுள்ள வேடிக்கைகள் இவைகளில் இல்லை.

ஔரங்கசீப்பு நாணயங்கள்—ஔரங்கசீப்பு உண்மையான மகம்மதியர்; மதத்தில் பக்தி யுள்ளவர். ஆகையால், இவர் நாணயங்களில் யாதொரு விதமான உருவமும் இல்லை; கொரானி லிருந்து விசேஷமான வாக்கியங்கள் சுருக்கமாய் எழுதப்பட்டுள்ளன. இவர் காலத்தில் சுமார் எழுபது தங்கசாலைகள் இருந்தன என்று தெரிகிறது. அவைகளின் பெயர் நாணயங்களில் போடப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம். இவருக்குப் பின் மொகலாய ராஜ்யம் க்ஷீணதசையடைந்தபோதிலும், நாணயங்கள் க்ஷீணதசை அடையவில்லை. கடைசியில் மொகலாயர் நாணயங்கள் ஆங்கில இந்து நாணயங்கள் ஆயின. ஆங்கிலக் கீழ் இந்தியக் கூட்டத்தார் முதல் முதல் 1717-ஆம் வருஷத்தில் தங்கள் நாணயங்கள் மொகலாய நாணயங்களைப் போலவே பம்பாயில் அடித்தனர்; பிறகு கல்கத்தா, ஆர்க்காடு, காசி முதலிய இடங்களில் தங்கசாலைகள் ஏற்படுத்தி நாணயங்கள் அடித்தனர். இம்மாதிரியான நாணயங்கள் அடிப்பது 1835, 1836-ஆம் வருடச் சட்டப்படி நிறுத்தப்பட்டது. அதுமுதல், அக்காலத்து அரசராக இருந்த நான்காம் உவில்லியத்தின் தலை போட்டு ஆங்கில நாணயங்கள் அடிக்கப்பட்டன. 1835-ஆம் வருஷத்தோடு இந்திய நாணயங்களின் வரலாறு முடிவு பெற்றது. மற்ற ஐரோப்பியாகளான போர்த்துகீஸ், பிரெஞ்சு, டச்சு, டேன்ஸ க்காரர்கள் முறையே தங்கள் வியாபார ஸ்தலங்களில் நாணயங்கள் அடித்து வந்தார்கள். போர்த்துக்கேசியர் நாணயங்கள் கோவாவில் அடிக்கப்பட்டன.

டச்சு நாணயங்களில் டச்சுக் கம்பெனியின் பெயர் போடப்பட்டு இருக்கிறது. பிரெஞ்சு நாணயங்களில் ஒரு பக்கத்தில் கோழியும் பிளோடிவியும், மறு பக்கத்தில் 'காரைக்கால், புதுச்சேரி' என்றும் போடப்பட் டிருக்கும்.

டேன்ஸ் நாணயத்தின் ஒரு பக்கத்தில் அவர்கள் கம்பெனிப் பெயரும், மறு பக்கத்தில் அக்காலத்து டேன்ஸ் அரசர் பெயரும் அடிக்கப்பட்டு இருக்கின்றன. தென் இந்தியாவில் இவர்களுக்குச் சொந்தமான வியாபார ஸ்தலம் **தரங்கம்பாடி**. இதை இவர்கள் இருநூறு வருட காலமாக வெகு நன்றாய்ப் பரிபாலித்து வந்தார்கள்.

தென்னிந்தியாவின் நாணயங்கள்—நர்மதை நதிக்குத் தெற்கிலுள்ளது தென்னிந்தியா. இது திராவிட தேசம். வட இந்தியாவைக் காட்டிலும் இதில் வெளி தேசத்தார் செல்வாக்கு மட்டு. இந்த விஷயத்தைத் தென்னிந்திய நாணயங்கள் நன்றாய்ச் சொல்லும். திராவிடர் தங்கள் நாணயங்களைத் தாங்கள் விரும்பிய விதமே அடித்தார்களே தவிர வேறொருவர் நாணயங்களைப்போல் அடிக்கவில்லை.

தென்னிந்தியாவில் புராதனநாணயங்கள் அகப்படுவது அரிது. அப்படி ஒன்று இரண்டு அகப்பட்டாலும் அவை மிகச் சிறியவையாகவும், தேய்ந்தும்இருக்கின்றன.தென்னிந்திய நாணயங்கள் கிடைக்காமைக்குக் காரணங்கள் இரண்டு; ஆதிகாலந் தொடங்கி வடஇந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த சந்திரகுப்தர், அல்லாவுதீன் முதலானவர்கள் ஏராளமான பொன் நாணயங்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். 1565-ஆம் வருஷத்தில் விஜய நகர ராஜ்யம் தோல்வியடைந்து மகம்மதியரால் கொள்ளை அடிக்கப்பட்டது.

தென்னிந்தியாவின் நாணயங்கள், அநேகமாய்த் தங்கத்தினலேயே அடிக்கப்பட்டன. இதற்கு அத்தாட்சியாக வயநாடு, கோலார்முதலான தங்கச் சுரங்கங்களில் பண்டைக் காலத்தில் தங்கம் வெட்டி எடுத்ததற்கான அநேக அறிகுறிகளிருக்கின்றன. வட இந்தியாவைப் போலவே

தென்னிந்தியாவிலும் வெட்டப்பட்ட நாணயங்கள் உபயோகப்பட்டு வந்தன.

சாளுக்கிய நாணயங்கள்—இவைகள் தெளிவாகவும் பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கின்றன. சாளுக்கிய ராஜ்யங்கள் இரண்டு: முதலாவது மேல் சாளுக்கிய ராஜ்யம். அதற்கு முக்கிய பட்டணம், பாதாமி என்று சொல்லப்பட்ட வாதாபி. இரண்டாவது கீழ் சாளுக்கிய ராஜ்யம். இதற்கு முக்கிய பட்டணம் வேங்கி. அதுதான் ராஜமகேந்திரபுரம். சாளுக்கிய நாணயங்கள் கிடைப்பது அரிது. சாளுக்கிய நாணயங்கள் பன்றியின் உருவம் போடப்பட்டிருக்கும். பன்றிக்குச் சமஸ்கிருதத்தில் வராஹம் என்று பெயர். இதிலிருந்துதான் வராஹன் என்கிற வார்த்தை உண்டாயிற்று என்று தெரிகிறது.

விஜயநகர நாணயங்கள்—இவை தங்கத்தினுல் அடிக்கப்பட்டன; அரசர்கள் பெயரும் இவற்றில் காணப்படுகின்றன.

ஐதராலி திப்பு சுல்தான்—மைசூர் மகம்மதிய அரசர்களாகிய ஐதராலி, திப்புசுல்தான் என்பவர்கள் தங்கள் நாணயங்களை விஜயநகர நாணயங்களைப்போலவே அடித்தனர்.

சேர சோழ பாண்டிய நாணயங்கள்—சேர நாணயங்களில் அம்பு, வில், தென்னமரம் போடப்பட்டிருக்கும்; சில நணயங்களில் மீனும் போடப்பட் டிருக்கும். எப்பொழுதாவது சேரன் பாண்டியனை ஜயித்துவிட்டால் பாண்டியன் போடும் மீன் உருவத்தைத் தனது நாணயங்களில் போட்டுக்கொள்வ துண்டு. இம்மாதிரி ஒவ்வொருவரும் போடுவது வழக்கமாக இருந்தது. பாண்டிய நாணயங்களில் சிலவற்றில் இரண்டு மீனும் போடப்பட்டிருக்கும். ஆதி சோழ நாணயங்கள் சிலவற்றில் புலியும், மீனும் போடப்பட்டிருக்கும்.

ஆனால், ராஜ ராஜ சோழன் நாணயத்தில் ஒரு பக்கத்தில் அரசன் நின்றுகொண்டிருக்கிற உருவமும், மறுபக்கத்தில் அரசன் உட்கார்ந்திருக்கிற உருவமும், 'ராஜ ராஜ,' என்ற பெயரும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு உருவங்களும் பார்ப்பதற்கு வெகு அவலட்சணமாயிருக்கும்.

உலகத்தாருக்கு எப்பொழுதும் வியப்பை உண்டுபண்ணக் கூடிய பெரிய அணைக்கட்டையும், பெரிய கோயில்களையும் கட்டி இராஜ்யத்தில் அநேக சீர்திருத்தங்கள் செய்து, குடிகளுக்குச் சௌக்கியத்தையே நாடின இம்மன்னனுக்கு நாணயங்கள் அழகாய்ப் போடத் தெரியாமலிருந்தது வியக்கத்தக்கதே!

13. தைரியமுள்ள போர்வீரன்—I

சில வருஷங்களுக்கு முன் பொம்பாய்ப் பட்டணத்திலிருந்த போர்வீரன் ஒருவன் ஒரு நாள் குடி வெறியினால் அறிவு மயங்கி வழியில் செல்லுவோரை அடிப்பதும், திட்டுவதுமாய் இருந்தான். அதனை அறிந்த அவன் மேலதிகாரி அவன்மீது சினந்து அவனுக்கு ஒருவாரக் கடுங்காவல் தண்டனை விதித்தார். அப்போர்வீரன் மயக்கம் தெளிந்ததும் தான் புரிந்த பிழையைக் குறித்துப் பெரிதும் வருந்தினான்; கடுங்காவற் சிறைச்சாலையில் தான் ஒரு வாரம் வரையில் இருக்க நேர்ந்ததை எண்ணி யெண்ணி ஏங்கினான். தான் செய்த குற்றத்தை மன்னித்து விடும்படி தன் தலைவனிடம் அவன் பெரிதும் வேண்டினான். எவ்வளவு முயன்றும் அவன் எண்ணம் சிறிதும் பலிக்கவில்லை. ஆதலால், அவன் அன்றே காவற் கூடத்திற்குக் கொண்டுபோகப் பட்டான்.

கடுங்காவல் என்பது மிகவும் கொடுமையான தண்டனை. அத்தண்டனையைப் பெற்றவன் ஒருவரோடும் பேசுதல் கூடாது. அவனை ஒருவரும் கண்ணெடுத்துப் பார்க்கவும்மாட்டார்கள். அவனுக்கு விதித்திருக்கும் காலம் வரையில் அவன் அச்சிறையிலேயே இருத்தல் வேண்டும். மலஜல பாதைகளையும் அவன் அவ்விடத்திலேயே கழித்தல் வேண்டும்.

பிள்ளைகளே, இத்தகைய கடுங்காவலில் அப்போர் வீரன் இருக்க நேர்ந்தது. ஆதலால் அவன் அப்போது தன் நிலைமையைக் குறித்து மிகுதியும் வருந்தினான். பின்னர், தன் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு அவன் அச் சிற்றறையைக் கூர்ந்து நோக்கினான். அதன் நான்கு புறமும் உறுதியான சுவர்கள் உயரமாக எழுப்பப்பட்டிருந் தன. அவ்வறைக்குக் காற்று வருதற்பொருட்டு, ஓர் ஆள் உயரத்திற்குமேல், இருப்புக் கம்பிகளால் இணைக்கப்பெற்ற ஒரு சிறு துவாரம் இருந்தது. அவ்வறையின் கதவும் மிக வலுவாகக் காணப்பட்டது. அப்போது, பனி மிகுந்த குளிர்காலமாதலால், அவன் இருந்த இடம் மிகவும் ஈரக் கசிவுள்ளதாய் இருந்தது. அவ்வற்றையின் ஒரு புறததே சுவரின் அடியில் சிறு சந்து ஒன்று காணப்பட்டது. அஃது அவ்வறையைக் கழுவிச் சுத்தம் செய்தற் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது என்று அவன் எண்ணினான்.

சிறுவர்களே, அந்தச் சிறையிலேயே அப்போர்வீரன் அன்று பகல் முழுவதும் தனிமையாய் இருந்தான். மாலைப் பொழுது நெருங்கியது; யாதொரு வேலையும் இன்மையால் அவன், அதிசீக்கிரத்தில் படுத்துறங்க எண்ணி னான். ஆதலின் அவன், தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த

கம்பளத்தின் ஒரு பகுதியைத் தலையணையாக மடித்து வைத்துக்கொண்டான்; மிருந்துள்ள பாகத்தை நிலத்தே விரித்து அதன்மேல் படுத்துக்கொண்டான். ஆனால், அப்போது அவனுக்கு உறக்கம் சிறிதும் வரவில்லை. எனினும், அவன் தன் கண்களை மூடியவண்ணம் ஏதேதோ எண்ணிக் கொண் டிருந்தான். சுமார் இரவு ஏழு மணி யிருக்கும்; அவ்வறை முற்றிலும் இருளடைந் திருந்தது. அப்போர் வீரன் அப்போதுதான் சிறிது உறக்கம் கொண்டான். அச்சமயத்தே, 'புஸ்—புஸ்' என்னும் ஒருவித சப்தம் அவன் காதில் பட்டது. அதனால் அவன் உறக்கம் நீங்கி, அச்சப்தம் உண்டானதின் காரணத்தையும், அது கேட்கும் இடத்தையும் கூர்ந்து கவனிக்க முயன்றான். ஆனால், அவன் அவ்விடத்தை விட்டு எழுந்திருக்கவுமில்லை; தன் கண்களைத் திறந்து பார்க்கவும் இல்லை.

சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும், 'புஸ்—புஸ்' என்னும் சத்தம் இன்னும் சற்று அதிகமாகக் கேட்க ஆரம்பித்தது. முன்பு பார்த்த சிறு சந்தின் வழியாகத்தான் அந்தச் சப்தம் வருகின்றது என்பதை அவன் உணர்ந்தான். எனினும் அஃது இன்னது என்பது அப்போதும் அவனால் நன்கு அறிந்துகொள்ள முடியவில்லை. இவ்விதம் அவன் சிறிது நேரம் மனக்கலக்கத்துடன் இருந்தான். அப்போது, அவன் காலின்மீது மிகக் கனமான ஏதோ ஒரு ஜந்து ஏறுவதை உணர்ந்தான்; பின்னர், அந்த ஜந்து மிகவும் நீண்ட உடலுடையது என்பதையும் அவன் உணர்ந்தான்.

பிள்ளைகளே, அஃது என்ன ஜந்து வென்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்? அஃது ஒரு பெரிய பாம்பு. இதை அந்தப் போர்வீரன் அப்போதே உணர்ந்துகொண்டான். எனினும் என் செய்வான்! அவன் இருக்கும் அறையோ

பூட்டப்பட் டிருக்கிறது. அவன் கையிலும் ஆயுதம் ஒன்றும் இல்லை. சத்தமிட்டுக் கூவினாலும் ஒருவராலும் வந்து உதவி செய்ய முடியாது. அந்தப் பெரிய பாம்பும் அவனை அப்போதே கடித்து விடும். ஆதலால், அவன் அசைவற்றுக் கட்டைபோல் கிடந்தான். அந்தக் கொடிய பாம்போ அவன் காலை விட்டு இறங்கவே இல்லை. அது மேலும் மேலும் நகர்ந்து கொண்டே வந்து முடிவில் அவன் தொடையை அடைந்தது. அப்போதும் அவன் சிறிதும் அஞ்சவில்லை; உடலை அசைக்கவுமில்லை. உயிரின்றி விறைத்துக் கிடக்கும் பிணம்போல் அவன் அப்போது இருந்தான். பின்னர், அது மெல்ல மெல்ல அவன் வயிற்றண்டை வந்து தன் உடலைச் சுருட்டிக் கொண்டு அவ்விடத்தே வெகு நேரம் வரையில் படுத்துக்கிடந்தது.

சிறுவர்களே, அப்போது அப்போர்வீரன் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! அவன் வயிறு சிறிது அதிகமாய் வீங்கினாலும், அல்லது வீக்கத்தில் குறைந்தாலும், அக் கொடிய பாம்பு அவனை உடனே கடித்துவிடும். ஆதலால், அவன் மிகச் சாக்கிரதையாகவே இருந்தான். அவ்வாறு இருப்பது எவ்வளவு துன்பமான காரியம்! அவ்வளவு துன்பத்தையும் அவ்வீரன் சகித்துக்கொண்டு நெடுமரம் போல் நிலத்தில் கிடந்தான். மணி பத்தாயிற்று; அப்போதும் அக்கொடிய அரவம் அவன் வயிற்றை விட்டு அகலவேயில்லை. மணி பன்னிரண்டாயிற்று; அது அவ்விடத்தை விட்டுச் சிறிதும் அசையவில்லை. என்ன செய்வான் பாவம்! எழு நரக வேதனைகளையும் ஒன்றாய் அநுபவிக்கினும் இக்கொடிய வேதனைக்கு ஈடாகுமா? ஆனால், அப்போதும் அவ்வீரன், தைரியத்தைக் கைவிடவில்லை. அவன் அசைவு என்பது

சிறிதும் இன்றி அப்படியே கிடந்தான். மணி ஒன்றாயிற்று; அப்போது அந்தப் பாம்பு மெதுவாய்த் தன் உடலை நீட்ட ஆரம்பித்தது. 'இனி எனக்குப் பயம் இல்லை. அரவம் அகன்று விடும்,' என்று எண்ணினான் அவ்வீரன். ஆனால், அதுவோ அவ்விதம் செய்யவில்லை. அப்பொல்லாத பாம்பு மேலும் மேலும் நகர்ந்து அவன் மார்பினுக்கு அருகே வந்து தன் தலையை உயரத் தூக்கிச் சிறிது நேரம் நாற்புறமும் சுற்றிப் பார்த்தது.

அன்புள்ள சிறுவர்களே, மிகப் பரிதாபகரமான அவன் நிலைமையினைக் கவனியுங்கள். அப்போது, அவன் தன் கண்களைச் சிறிது திறந்திருப்பானே யாகில் அக்கணமே அவன் உயிர் அவ்வுடலை விட்டு நீங்கியிருக்கும். அச்சத்தால் மார்பு 'படபட' வென்று அடித்திருந்தாலும் சரியே—மூச்சு சிறிது அதிகமாய் விட்டிருந்தாலும் சரியே—அவன் அப்போதே உயிரிழந் திருப்பான். அந்த ஒப்பற்ற உண்மை வீரனுக்கோ இவ்விதத் தடைகள் சிறிதும் நேரவில்லை. அவன் அச்சமயத்தும் பிணம்போல் அசைவற்றுக் கிடந்தான். அந்தச் சண்டாளச் சர்ப்பமோ அவன் மார்பை விட்டுச் சிறிதும் அகலவில்லை. அவ்விடத்திலேயே அது படுத்துறங்க ஆரம்பித்தது. என்ன செய்வான் பாவம் அவ்வீரன்! அவனுக்குத் தன் உயிரின் மீதிருந்த நம்பிக்கை அப்போது முற்றிலும் ஒழிந்தது. ஆனாலும், அவன் தைரியத்தைக் கைவிடவில்லை. மணி மூன்றடித்தது; மூன்றரையும் ஆயிற்று; அப்போதும் அஃது அவ்விடத்தை விட்டு அசையவே யில்லை.

அருமைச் சிறுவர்களே, இவ்வண்ணம் இருக்க யாரால் இயலும்! முற்றும் துறந்த முனிவனாலும் ஆகாது—ஆகாது. ஆனால், அவ்வீரனோ சிறிதும் மனஞ்சலிக்க வில்லை.

அவன் கைகளும் கால்களும் மரத்துப்போயின. தும்மல், இருமல், கனைத்தல் முதலியன அவனிடத்தே தலைகாட்டவில்லை. ஊக்கம் அவன் உள்ளத்தே குடிகொண்டிருந்தது; தைரிய லக்ஷ்மி அவன் முகத்தே தாண்டவமாடினள். அவ்வீரன் அடியற்ற நெடுமரம்போல் அசைவற்றுக் கிடந்தான்.

---

14. தைரியமுள்ள போர்வீரன்—II

மணி நான்காயிற்று; நாகமோ நகர்ந்த பாடில்லை. அச்சமயம் அவனுக்கு ஒரு நிமிஷம் ஓர் யுகம்போல் தோன்றிற்று. அவன் எத்துணை நேரம் சகித்திருப்பான் பாவம்! ‘ஏது?—நான் இன்று இந்நாகத்திற்கு இரையாவேன்! இது திண்ணம்—திண்ணம்,’ என்று எண்ணினன் அப்போர்வீரன். எனினும், அவன் உள்ளம் அப்போதும் உறுதி கொண்டிருந்தது. ‘இன்னமும் பார்ப்போம்—இன்னமும் பார்ப்போம்,’ என்னும் எண்ணமே அவன் நெஞ்சில் நீங்காதிருந்தது. பொறுமையே வடிவமாகக் கொண்டிருந்த அப்போர்வீரன் இவ்வண்ணம் அவ்விரவு முழுதும் மனம் பொறுத்திருந்தான். அதிகாலை மணி ஐந்தாயிற்று; அப்போது, அவ்வறையில் சிறிது வெளிச்சம் உண்டாயிற்று. அதுகண்ட அப்பெரும்பாம்பு அவன் மார்பை விட்டு மெல்ல நகர்ந்து எங்கோ மறைந்துவிட்டது.

சிறுவர்களே, அப்போது அவ்வீரன் எவ்வளவு ஆனந்தமுற்றிருப்பான்! அவன் உள்ளம் எவ்வளவு குளிர்ந்திருக்கும்! எனினும் சிறுவர்களே, அவன் அவ்விடத்தை விட்டு மிக்க ஆனந்தத்துடன் எழுந்து விட்டான் என்று எண்ணுகின்றீர்களா? இல்லை—இல்லை. அப்போர்வீரன்

அப்போது தன் கண்களையும் திறந்து பார்க்க வில்லை; ஏனெனில், அவன் தன் மார்பின்மீதிருந்த பாரம் நீங்கியதை உணர்ந்தானே யன்றி அப்பாம்பு இன்ன இடத்தில் இருந்தது என்பது அவனுக்குத் தெரியாது. அது பக்கலிலேயே படுத்திருக்கினும் இருக்கலாம். அல்லது வெளியே சென்றிருக்கினும் இருக்கலாம். அஃது அவனுக்கு எவ்வாறு தெரியும்? அவன் தன் கண்களைத் திறக்கும்போது அப்பாம்பு அவ்வறையிலேயே இருக்குமானல் அவனை அந்நிமிஷமே கடித்து விடுமன்றோ? ஆதலால் அவன் அப்போதும் பொறுமையையே கடைப்பிடித்திருந்தான்.

காலை மணி ஏழரையாயிற்று; கதிரவன் கிரணங்கள் அவன் கண்கள்மீது பட்டன. அப்போதுதான் அப்போர் வீரன் தன் படுக்கையை விட்டு எழுந்திருக்க எண்ணங் கொண்டான். எனினும், அவன் உடனே அவ்வாறு செய்யவில்லை. முதலில் அவன் தன் கண்களைச் சிறிது சிறிதாகத் திறந்தான்; பின்னர், அவன் தன் மீதேனும், தனக்குப் புறத்தேனும் தனக்குத் தெரியாதபடி அப்பாம்பு மறைந்திருக்கலாம் என்னும் எண்ணத்தோடு தன் பாதத்தினிருந்து தோள் வரை ஒரு முறை கூர்ந்து நோக்கினன். ஆனல், அவ்வீரன் அச்சமயத்தும் தன் உடலைக் கொஞ்சமேனும் அசைக்கவில்லை. அதன் பின்னர், தன் தலையைச் சிறிதும் அசைக்காது அவ்வறையின் மூன்று பக்கங்களிலும் விழிகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அரவம் அவ்விடங்களிலும் இல்லாமை கண்டு அவ்வீரன் முற்றிலும் மனங்களித்தான். எனினும், அவ்விடத்தை விட்டு அவன் அப்போதும் எழுந்திருக்கவில்லை. ஏனெனில், தனக்குப் பின் புறத்தில் ஒருகால் இருக்கலாம் என்னும் எண்ணம் அப்போது அவன் மனத்தில் உதித்தது. ஆதலால், அவன்

சிறிது நேரம் ஆழ்ந்து யோசிக்கலாயினன். 'அந்தப் பெரும் பாம்பு முன்பு வந்த அத்துவாரத்தின் வழியே சென்றிருத்தல் வேண்டும். இது நிச்சயம். ஒருகால் அஃது எனக்குப் பின்புறத்தில் மறைந்திருத்தல் கூடுமோ? பின்புறத்தில் எங்கே மறைந்திருக்கும்? மிகக் குளிர்ந்த இடத்தில் படுத்திருக்கப் பாம்புகள் விரும்புவதில்லை. ஆதலால், நான் தலைக்கு அணையாக வைத்திருக்கும் கம்பளத்தில் அநேகமாய் ஒளிந்திருக்கலாம். ஐயோ! அக் கொடும் பாம்பு அங்கே மறைந்திருந்தால் என் செய்வது? நான் எழுந்திருப்பதற்குள் அஃது என்னை வெடுக்கென்று கடித்து விடுமே! அந்தோ! கடவுளே! ஆயின் நான் இதுவரையில் பட்ட பாடனைத்தும் பயனற்றுப் போகுமே!' என அப்போர்வீரன் ஒரு சிறிது வருந்தினன். பின்னர், 'ஆறிலும் சாவு; நூறிலும் சாவு,' அஞ்சுவதில் யாதும் பயனில்லை. அப் பாம்பு வெளியே சென்றிருப்பினும் சரியே; என் தலையணையில் ஒளிந்திருப்பினும் சரியே; நான் எழுந்திருக்கும்போது என் தலைக்கு அணையாக உள்ள அக்கம்பளத்தை வலுவாய்ப் பூமியில் அழுத்தியபடியே எழுந்திருப்பேனாகில் அப் பாம்பு அதில் மறைந்திருப்பினும் என்னை ஒன்றும் செய்ய அதனல் இயலாது,' எனத் தீர்மானித்தவனாய் அப்போர் வீரன் திடீரெனத் தன் கைகளால் அக்கம்பளத்தை அழுத்திக் கொண்டு படுக்கையை விட்டு விரைந்தெழுந்தான். அதே சமயத்தில் அந்தக் கம்பளத்திலிருந்து அப் பெரும் பாம்பு தன் படத்தை விரித்துக்கொண்டு சரேலென்று கிளம்பி அப்போர்வீரனைக் கடிக்க முயன்றது.

பிள்ளைகளே, அவ்வீரன் அவ்வளவு முன் சாக்கிரதையாக இருந்தும் அவனுக்கு எதிர் பாராது நேர்ந்த துன்பத்தைப் பாருங்கள்! ஆனல் அப் போர்வீரனே

அதைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. அவன் அக்கணமே விரைந்து அதன் கழுத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டான். அப்போது, அந்தப் பாம்பு வெகுண்டு தன் வாலை வீசியது. அவ்வீரன் அதையும் உடனே மற்றொரு கையால் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான்.

சிறுவர்களே, அப்பெரும் பாம்பை அவன் உறுதியாய்ப் பிடித்துக் கொண்டே அவ்வறையின் கதவருகே சென்று தன் கால்களால் அதனைப் 'படீர் படீர்' என்று உதைத்தான். வெகு நேரம் வரையில் ஒருவரும் அங்கே வரவில்லை. பின்னர், ஒரு காவலாளன் அவ்விடத்தை அடைந்து, காரணம் யாதென வினவினன். அப்போது அவ்வீரன் 'பாம்பு—பாம்பு; கையில் பிடித்துக்கொண்டிருக்கிறேன்; கதவைத் திற—கதவைத்திற,' என்று கதறினன். அக்காவலாளன் உடனே ஓடிச்சென்று தலைமைக் காவலாளனிடம் அவ்விஷயத்தைக் கூறி அவனையும் அழைத்துக் கொண்டு திறவுகோலுடன் அங்கே விரைந்து வந்தான்.

சிறைச்சாலையின் கதவு திறக்கப்பட்டது; அப்போர் வீரன் அந்தப் பெரிய பாம்போடு வெளியே வருதலைக் கண்டு, எல்லோரும் பயந்து ஓட ஆரம்பித்தனர். அப்போது அவன் அவர்களுக்குத் தைரிய மொழிகள் கூறி, அவர்களை அழைத்துக் கொண்டு புதல் அடர்ந்திருந்த ஓர் இடத்தை அடைந்து, அங்கே அந்தப் பெரும்பாம்பைச் சுழற்றி எறிந்தான். அதை அவன் கொன்று போடாமைக்கு அநேகர் வருந்தினர். அப்போது அவன், 'ஐயா, என்னைக் கொல்லாது விடுத்த அதனைக் கொல்லுதல் நியாயமாகுமா? நான் முன்பு எவ்வாறு அதனைக் கண்டு அஞ்சினேனோ அவ்விதம் அதுவும் என்னைக் கண்டு இப்போது அஞ்சியிருக்குமல்லவா?

ஆதலின், அப்பாம்பும் என்னைப்போல் இன்பமாய்ச்செல்லு தலே நியாயம் என்று', கூறினான்.

பின்னர், அன்றிரவு முழுதும் தான் பட்ட துன்பங் களில் அவன் அவர்களுக்கு ஒன்றையும் விடாது கூறினான். அவனது தைரியச் செயலினைக் கேட்டு எல்லோரும் ஆச் சரிய மடைந்தனர். இவ்விஷயம் அப்போர்வீரனது மேலதிகாரிக்கும் எட்டிற்று. அது கேட்ட அவ்வதிகாரி அப்போர்வீரனது ஆண்மையைக் குறித்தும், பொறுமை யைக் குறித்தும் மிகுதியும் மகிழ்வடைந்து, அவனை அன்றே அச் சிறைச்சாலையினின்றும் நீக்கி அவனுக்கு உயர்ந்த உத்தியோகமும் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

---

15. வெனிஸ் வர்த்தகன்—I

அநேக வருஷங்களுக்குமுன் வெனிஸ் என்னும் பட்டணத்தில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் பெரிய பணக்காரன். அவன் பெயர் **அன்டோனியோ.** அவ் வியாபாரி தரும குணம் உடையவன். அவன் பல கப்பல் கள் வைத்திருந்தான். வெகு தூரத்திலுள்ள ஊர்களில் அவன் வியாபாரம் செய்தான்.

அன்டோனியோவுக்கு ஒரு சிநேகிதன் இருந்தான். அவன் பெயர் **பேஸ்ஸானியோ.** பெரிய பணக்காரன் மகள் அவனைக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டாள். கலியாணத்திற்குப் பணம் இல்லை. ஆதலால், அவன் தன் சிநேகிதன் அன்டோனியோவைக் கடன் கேட்டான். அன்டோனியோவினிடம் அச்சமயம் கையில் பணமில்லை. அவன் கப்பல்கள் எல்லாம் வெளியூருக்குச் சென்றிருந்தன.

அவை திரும்பி வந்தால் அவனுக்கு எவ்வளவு பணம் வேண்டினும் கிடைக்கும்.

அன்டோனியோவின் கையில் பணம் இல்லாமற்போனு லும், அவன் தன் சிநேகிதனுக்கு வேறு எவரிடத்திலாகி லும் பணம் வாங்கிக் கொடுக்கவேண்டு மென்று எண்ணி ஞன். அச்சமயம் அவனுக்குக் கடன் கொடுப்பவர் யாரென்று தெரிய வில்லை. அவன் சிறிதுநேரம் யோசனை செய்தான். அப்போது ஒருவன் பெயர் அவன் நினைவிற்கு வந்தது. அவன் பெயர் ஷைலாக். ஷைலாக் வட்டிக்குப் பணம் கொடுத்தே ஜீவித்து வந்தான். அவன் பொல்லாத வன். அவன் கொஞ்சம் கூடக் கருணையில்லாமல் ஏழைக ளிடம் பெரு வட்டி வாங்குவான். அன்டோனியோவுக்கு அவன் செயல் சிறிதும் பிடிப்பதில்லை. இருந்தபோதிலும், அன்டோனியோ அவனிடத்திலேயே கடன் வாங்கச் சென்ருன்.

ஷைலாக் அன்டோனியோவை மிகவும் வெறுத்தான். ஏனென்ருல், அன்டோனியோ வட்டி வாங்காமல் எல் லோர்க்கும் பணம் கொடுத்து வருவது வழக்கம். அதுவும் அல்லாமல், அவன் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவன். ஷைலாக் வேறு மதத்தை அனுசரித்தவன். ஆதலால், ஷைலாக் அன்டோனியோவைக் கெடுப்பதற்கு நல்ல சமயம் பார்த்துக்கொண் டிருந்தான். அவன் விரும்பியபடி அன் டோனியோ தன்னை வந்து கடன் கேட்டபோது, அவன் தன் மனத்திற்குள் மிகவும் சந்தோஷம் அடைந்தான். ஷைலாக், அன்டோனியோ தான் வாங்கும் பணத்தை மூன்று மாதத்திற்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்றும், அப்படித் தவறினுல் அவன் தேகத்தில் ஒரு பவுன்

மாமிசத்தைத் தான் அறுத்து எடுத்துக்கொள்வதாகவும் சொன்னான். அன்டோனியோ அதைக் கேட்டதும், மிகவும் கோபங் கொண்டான். ஆனால், அதை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. எப்படி யிருந்தபோதிலும், ஷைலாக் அதை அறிந்து கொண்டான். ஆதலால், அவன் விளையாட்டிற்கு அப்படிக் கேட்டதாகச் சொன்னான். ஆனால், விளையாட்டாக இருந்தாலும்,பத்திரம் எழுதித்தான் கொடுக்க வேண்டும் என்று ஒரே பிடிவாதமாக இருந்தான். அன்டோனியோவிற்கு இன்னும் அதிக கோபம் உண்டா யிற்று. ஷைலாக் மிகவும் அயோக்கியன் என்று அவனுக்கு நன்றாக விளங்கிற்று. ஆனால், அவன் தன் கப்பல்கள் மூன்று மாதத்திற்குள் அவசியம் வந்து விடுமென்று நிச்சய மாக எண்ணி யிருந்தான். அதுவும் அல்லாமல், தன்னை நம்பி வந்த சிநேகிதனுக்கு உதவி செய்யாமல் இருக்க அவ னுக்கு இஷ்டமில்லை. ஆதலால், அவன் ஷைலாக் சொன்ன படி பத்திரம் எழுதிக் கொடுத்துப் பணம் வாங்கித் தன் சிநேகிதனுக்கு உதவி செய்தான்.

பெஸ்ஸானியோ பணத்தைப் பெற்றுக்கொண்டு தன் தோழன் கிரேஷியானோவுடன் பேல்மாண்ட் நகரத்திற்குச் சென்றான். அப்பட்டணத்தில்தான் அவன் இஷ்டப்பட்ட பெண் இருந்தாள். அவள் பெயர் போர்ஷியா. அம்மங்கை மூன்று பெட்டிகள் வைத்திருந்தாள். ஒன்று பொன்னால் செய்யப்பட்டது; ஒன்று வெள்ளியால் செய்யப்பட்டது; ஒன்று ஈயத்தால் செய்யப்பட்டது. அம்மூன்று பெட்டி களுள் ஒன்றில் அவள் படம் வைக்கப்பட்டிருந்தது. பொற் பெட்டியின் மேல் என்ன எழுதியிருந்த தென்றால், "யார் இதை எடுக்கிறார்களோ அவர்களுக்கு அதிக பொருள் கிடைக்கும்," என்பதாகும். வெள்ளிப் பெட்டியில், "இதை

எடுப்பவர்க்குத் தம் யோக்கியதைக்கு ஏற்றபடி நன்மை கிடைக்கும்,'' என்று எழுதப்பட் டிருந்தது. ஈயப் பெட்டி யில், "இதை எடுப்பவர்கள் தங்கள் பொருள்களை எல்லாம் கொடுத்துவிடவும் வேண்டும்; பல ஆபத்துகளுக்கு உள்ளாக வும் வேண்டும்,'' என்று எழுதப்பட் டிருந்தது. போர்ஷியா வின் தகப்பனார் தாம் இறந்துபோவதற்கு முன்னே, "அப் பெட்டிகளில் எவன் ஒருவன் ஈயப் பெட்டியை எடுக்கி றானோ அவனைத்தான் அவள் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவளிடம் சொல்லி யிருந்தார். அவர் கட்டளைப்படி அவள் நடக்க வேண்டியவளாக இருந்தாள். அவளைக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டு வந்த அநேக வாலிபர்கள் பொற் பெட்டியையும், வெள்ளிப் பெட்டியையும் ஆசைப்பட்டு எடுத்தார்கள். ஒருவரேனும் ஈயப் பெட்டியை எடுக்கவே யில்லை. ஈயப் பெட்டியில்தான் போர்ஷியாவின் படம் வைக்கப்பட் டிருந்தது. அப்பெட் டியை எடுப்பவன்தான் அவளைக் கலியாணம் செய்து கொள்ள முடியும். ஆதலால், பெஸ்ஸானியோ வந்தபோது அவன் எந்தப் பெட்டியை எடுத்துவிடுகின்றானோ என்று அவள் மிகவும் பயந்தாள். ஆனால், அவன் ஈயப் பெட்டி யைத்தான் எடுத்தான். போர்ஷியா மிகவும் சந்தோஷம் அடைந்தாள். பிறகு அவள் பெஸ்ஸானியோவையே கலி யாணம் செய்து கொண்டாள். அவள் தோழி நெரிஸ்ஸா கிரேஷியானோவை விவாகம் செய்துகொண்டாள்.

பெஸ்ஸானியோ சந்தோஷமாகப் போர்ஷியாவின் மாளிகையி லிருந்தபோது, அவனுக்கு ஒருநாள் ஒரு கடிதம் வந்தது. அக்கடிதம் அவன் சிநேகிதன் அன்டோனியோ எழுதிய கடிதம் ஆகும். அன்டோனியோ அதில் தன் கப்பல்கள் தான் நினைத்தபடி வரவில்லை என்றும், ஆதலால்

தான் ஷைலாக்கிற்கு ஒரு பவுன் மாமிசம் கொடுத்து இறப்பதற்குள் தன் சிநேகிதன் பெஸ்ஸானியோவைப் பார்க்க வேண்டும் என்றும் எழுதி யிருந்தான். அக் கடிதத்தைப் பார்த்ததும் பெஸ்ஸானியோ கண்ணீர் விட்டான். அவன் மனைவி, அன்டோனியோவின் அருமைக் குணங்களைத் தன் புருஷன் சொல்லக் கேட்டிருந்தாள். ஆதலால் அவள், தன் புருஷனைப் பார்த்துத் "தாங்கள் கண்ணீர் விடுவதில் பிரயோசன மில்லை; தங்கள் அருமைச் சிநேகிதரை உடனே போய்ப் பாருங்கள்," என்று சொன்னாள். அவள் சொன்னபடியே பெஸ்ஸானியோ தன் தோழனுடன் அன்டோனியோவைப் பார்க்கச் சென்றான்.

---

16. வெனிஸ் வர்த்தகன்—II

பெஸ்ஸானியோவும், கிரேஷியானோவும் சென்றதும், போர்ஷியா வக்கீலாக இருந்த தன் பந்து ஒருவரிடம் சென்றாள். அவள் அவரிடம் ஒரு கடிதத்தையும், அவர் உடையையும் வாங்கிக் கொண்டாள். போர்ஷியா தன் தோழிக்கு வக்கீல் குமஸ்தாவின் உடையையும் வாங்கிக்கொண்டாள். அவர்கள் இருவரும் அவ் வுடைகளைப் போட்டுக் கொண்டு வெனிஸ் நகரத்திற்குச் சென்றார்கள். அங்கு நியாயசபையில் அன்டோனியோ, பெஸ்ஸானியோ, ஷைலாக் முதலிய எல்லோரும் இருந்தார்கள். அநேக ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதற்கு வந்திருந்தார்கள். நியாயாதிபதி ஓர் உயர்ந்த பீடத்தில் உட்கார்ந்திருந்தார்.

வக்கீல் குமஸ்தாவைப்போல் வேடம் போட்டுக்கொண்டிருந்த நெரிஸ்ஸா, வக்கீல்கொடுத்தகடிதத்தைநியாயாதிபதியிடம் கொடுத்தாள். அவர் அதைப் படித்துப் பார்த்தார்.

அதில் அந்த வக்கீல் தமக்குத் தேகம் சிறிதும் சௌகரியம் இல்லையென்றும், தமக்குப் பதிலாக வயதில் சிறிய, ஆனால் அறிவில் பெரிய, ஒரு வாலிப, வக்கீல் அன்டோனியோ வழக்கில் வாதிப்பாரென்றும் எழுதப்பட்டிருந்தன. நியாயாதிபதி வக்கீலாக வந்த போர்ஷியாவை வாதிக்கச் சொன்னார். போர்ஷியா விஷயத்தை எடுத்து ஒழுங்காகப் பேசிக்கொண்டு வந்தாள். எல்லோரும் அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். போர்ஷியா, ஷைலாக் எழுதிவாங்கிய பத்திரத்தின்படி அன்டோனியோ தன் தேகத்தில் ஒரு பவுன் மாமிசத்தைக் கொடுத்துவிட வேண்டியது நியாயந்தான் என்று சொன்னாள். ஷைலாக் மிகவும் சந்தோஷம் அடைந்து, போர்ஷியாவைப் புகழ்ந்தான்.

அப்பொழுது போர்ஷியா, கருணையின் பெருமையினை விரிவாக எடுத்துக் கூறி அன்டோனியோவை மன்னித்து விடும்படி ஷைலாக்கினிடம் மிகுதியும் வேண்டிக் கேட்டுக் கொண்டாள். ஷைலாக் அதற்குச் சிறிதும் இணங்கவில்லை. பெஸ்ஸானியோவும், கிரேஷியானோவும் அன்டோனியோ வாங்கின பணத்திற்கு இரட்டிப்பாகவும், அதற்கு மேலும் கொடுப்பதாகக் கூறினார்கள். எதற்கும் ஷைலாக் இணங்காமல், தனக்குப் பத்திரத்தில் உள்ளபடியே தீர்ப்புவேண்டும் என்று வக்கீலாக வந்த போர்ஷியாவைக் கேட்டான்.

ஆதலால், போர்ஷியா பிறகு ஷைலாக்கைப் பார்த்து, "நீர் ஒரு பவுன் மாமிசம்தான் அன்டோனியாவின் தேகத்தில் அறுத்து எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு மேல் ஒரு மயிரிழையும் எடுக்கக்கூடாது. அதுவும் அல்லாமல் நீர் மாமிசத்தை அறுக்கும்போது ஒரு துளி இரத்தமும் வரக்கூடாது. உமது பத்திரத்தின்படி இதுதான் நியாயம்,"

என்று சொன்னாள். ஷைலாக் பயந்து விட்டான். அவன் தனக்குப் பணம் வேண்டாமென்று வீட்டிற்குப் போகத் தயாராக இருந்தான். ஆனால் போர்ஷியா அவனைப் போக விட வில்லை. அவள் அவனைப் பார்த்து, "ஐயா, நீர் ஓர் உயிரைக் கொல்லுதற்குச் சூழ்ச்சி செய்ததால் உமது சொத்தில் பாதி அரசாங்கத்தாருக்கும், பாதி அன்டோனியோவுக்கும் சொந்தமாய் விட்டது. மேலும் நீர் நியாயாதிபதியை உயிர் பிச்சை கேட்டுக்கொள்ள வேண்டும்," என்று சொன்னாள். ஷைலாக் நடுங்கி விட்டான். அவன் இன்னது செய்வதெனத் தெரியாமல் தவித்தான். பிறகு போர்ஷியாவிடம் அவன் தன் சொத்தில் பாதியைத் தன் மகளுக்கும், மருமகனுக்கும் கொடுத்துவிடுகிறதாகவும், தன் மதத்தை விட்டுவிடுகிறதாகவும் சொன்னான். அவன் தன் மகளை வீட்டில் சேர்க்காமல் இருந்தான். ஏனென்றால், அவள் தான் இஷ்டப்பட்ட புருஷனிடம் வாழ்ந்திருந்தாள். ஆகையால், போர்ஷியா அவளுக்கும் ஒரு நன்மைசெய்தாள். அன்டோனியோ தப்பித்துக்கொண்டான்.

பெஸ்ஸானியோ மிகவும் சந்தோஷம் அடைந்து போர்ஷியாவை யாரோ ஒரு வக்கீலென்று நினைத்துக் கொண்டபடியால் அவள் வேண்டிய வெகுமதியைத் தான் கொடுப்பதாகச் சொன்னான். அவள், அவன் விரலில் போட்டுக் கொண்டிருந்த மோதிரத்தைக் கேட்டாள். அவன் மனைவி அம் மோதிரத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், ஒருவருக்கும் அதைக் கொடுக்கக் கூடாது என்றும் சொல்லியிருந்தாள். ஆனால் அவ்விதம் அம் மோதிரத்தைக் கொடுக்காமல் இருக்க அப்போது அவனால் முடியவில்லை. அவன் அவள் கேட்டபடி தன் மோதிரத்தைக் கொடுத்து விட்டான். வக்கீல் குமஸ்தாவாக வந்த

நெரிஸ்ஸாவும் கிரேஷியானோ விடமிருந்து மோதிரத்தை வெகுமானமாக வாங்கிக் கொண்டாள். பிறகு அவர்கள் இருவரும் தங்கள் நகருக்குச் சென்று விட்டார்கள்.

அன்டோனியோவும், பெஸ்ஸானியோவும் போர்ஷியா இருந்த மாளிகைக்கு வந்தார்கள். போர்ஷியா தன் கணவன் பெஸ்ஸானியோவைத் தன் மோதிரம் எங்கே என்று கோபமாகக் கேட்டாள். அதற்கு அவன் விழிக்க ஆரம்பித்தான். நெரிஸ்ஸாவும் கிரேஷியானோவைத் தான் கொடுத்த மோதிரத்தைக் கேட்டாள். அவன் பெஸ்ஸானியோவிற்கு மேல் விழிக்க ஆரம்பித்தான். அவளும் மிகவும் கோபித்துக் கொண்டாள். பிறகு அப் பெண்கள் இருவரும் அம்மோதிரங்கள் தங்கள் விரல்களில் இருப்பதைக் காட்டினார்கள். அப்போது போர்ஷியாவே வக்கீலாகவும், நெரிஸ்ஸாவே வக்கீல் குமஸ்தாவாகவும் வந்தவர்கள் என்று அன்டோனியோவும், பெஸ்ஸானியோவும் தெரிந்து கொண்டார்கள். ஆகையால், அவர்கள் இருவரும் மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். சிறிது நேரம் சென்றதும், போர்ஷியா ஒரு கடிதத்தை எடுத்துவந்து அன்டோனியோவின் கையில் கொடுத்தாள். அவன் அதைப் பிரித்துப் பார்த்தான். அவன் கப்பல்கள் மூன்றும் சாமான்களுடன் பத்திரமாக வந்து சேர்ந்ததாக அதில் எழுதப்பட்டிருந்தது. அப்போதுதான் அவன் முற்றிலும் சந்தோஷம் அடைந்தான்.

17. உலக ஞானம்

நாம் சிறுவர்களாய் இருக்கும் பொழுதே ஒவ்வொரு வித்தையையும் ஆவலுடன் கற்றுக் கொள்ளவேண்டும். சில வித்தைகளினால் பிரயோஜனமில்லை யென்று அவற்றைக்

கற்றுக் கொள்ளாமல் இருக்கக் கூடாது. "களவும் கற்று மற," என்று புலவர்கள் சொல்லி யிருக்கிறார்க ளல்லவா? நமது வாழ்நாட்கள் முழுமையும் சரியாய்க் கவனித்து வருவோமேயானால் ஒவ்வொரு வித்தையையும்உபயோகிக்கச் சரியான காலம் நேரிடுவதை நாம் காணலாம்.

உலக ஞானம் என்பது உலகத்தில் பழகியே வரவேண்டுமே அல்லாமல் உள்ளே உட்கார்ந்தபடி ஒருநாளும் வரமாட்டாது. புஸ்தகங்களைப் படிப்பது மட்டும் போதாது; படித்தறிந்தவைகளைப் பரிசோதிக்கப் பிரஜைகளுடன் பழகியும் பார்க்க வேண்டும். இவ்விதமான பழக்கம், "இணக்க மறிந் திணங்கு," என்றபடி வெகு ஜாக்கிரதையாக நடந்து வந்தா லொழிய நமக்கு எளிதில் வரமாட்டாது. சாஸ்திரங்கள் படிப்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமோ அவ்வளவு ஜாக்கிரதையாய் மனிதர்களுடன் பழகுவதிலும் நாம் இருக்க வேண்டும்.

அல்லாவிடின் நாம் நாளுக்குநாள் வயதில் உயர்வோமாகிலும் அறிவில் விருத்தியடையாமலே இருந்து விடுவோம். வெகு ஜனங்கள் தாடி நரைத்திருப்பார்கள்; ஞானமென்பதில் பத்து வயது பாலகனுக்குக்கூட நிகரில்லாதவர்களாயிருப்பார்கள். உலக ஞானம், நெறி நீங்கித் திரியும் சோம்பேறிகளுடைய சகவாசத்தால் உண்டாகவேமாட்டாது. ஆனால், அவர்களையும் நீ அறிந்திருக்க வேண்டியது அவசியமே. நீ நல்ல சகவாசமே எப்பொழுதும் செய்து கொண்டு இருக்கவேண்டும். நீ பழகும் ஒவ்வொருவருடைய குணாதிசயங்களையும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அன்றியும் அவர்களுடைய நற்குணம், துர்க்குணம், தற்புகழ்ச்சி, வீண்பேச்சு முதலியவைகளையும் உற்றுப் பார்க்க

வேண்டும். அப்படிச் செய்வதுதான் ஈசுவரன் நமக்குப் புத்தி கொடுத்திருப்பதற்குப் பிரயோஜனம்.

ஒரு மனிதன் எவ்வளவுதான் வயோதிகனுகவும், மதிப்பற்றவனுகவும் இருந்த போதிலும் அவனும் ஒரு சமயத்தில் உனக்கு ஏதாவது உதவி செய்யும்படி நேரிடுமாகையால், நீ ஒருபொழுதும் ஒருவரையும் இகழவே இகழாதே. "சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்," என்ற பழமொழியின் அர்த்தம் இதுவே. நாம் ஒருவருக்கு ஒரு தீங்கு செய்தால் வெகுவாய் அவர்கள் அதைப் பொறுக்கலாம்; இகழ்ச்சியையோ ஒரு நாளும் பொறுக்கமாட்டார்கள். ஒவ்வொருவனுடைய அகங்காரமும் அதைச் சதா மனத்தில் வைத்துக் கொண்டே இருக்கும். நாம் இகழ வேண்டியவனுய் இருந்த போதிலும் அதை மனத்துக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமே யல்லாது வெளியில் காட்டக் கூடாது.

நம்மைவிட ஒருவன் தனம், வித்தை, அந்தஸ்து முதலியவைகளில் தாழ்ந்தவனுயினும் அதை நாம் வெளியில் காட்டவே கூடாது. அப்படிச் செய்வது நமது மனுஷத்தனத்துக்கு மிகவும் குறைவு. கூடியமட்டும் நாம் எல்லோரையும் நமக்குச் சரியானவர்களாக ஒவ்வொரு விஷயத்திலும் எடுத்துக் கொண்டே பேச வேண்டும். அப்படிச் செய்வது எவ்வளவு அழகு! ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தான் என்கிற எண்ணம் இருந்து கொண்டேயிருக்கும். அதனைச் சந்தோஷிப்பித்தால் அவன் நம்மிடத்தில் எவ்வளவோ பிரீதியுள்ளவனுய் இருப்பான். இந்த விஷயத்தில் நமது வாழ்நாள் முடிய நாம் ஜாக்கிரதையாய் இருந்து காலம் தள்ளவேண்டும்.

சில அற்பபுத்திகள் தம்மிடத்திலிருக்கும் குற்றங்களைக் கவனியாமல் பிறருடைய குற்றங்களையே சங்கம் முதலான

இடங்களில் உரைத்துக்கொண் டிருப்பார்கள். இது பெரிய அவலட்சணம். வாலிபர்களா யிருக்கும்பொழுது ஒவ்வொருவரிடமும் இந்தக் குணம் இருப்பதுண்டு. பிறரைப் பழிப்பதால் அக்காலத்தில் நமக்கு மனத்தில் சந்தோஷம் இருப்பினும் அது எக்காலத்திலும் ஜனங்கள் நம்மை இகழும்படி செய்து கொள்ளுவதாகும். நமக்குச் சுவாமி கொடுத்திருக்கும் புத்தியைப் பிறரைப் புகழ்வதிலேயே உபயோகிக்க வேண்டுமே அல்லாது அவர்கள் நம்மை வெறுக்கும்படியான வழியில் உபயோகிக்கலாகாது. குமரகுருபர சுவாமிகளும் நீதி நெறி விளக்கத்தில் இந்தப் பொருளை வைத்தே பாடி இருக்கிறார்:

‘ பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூக்கிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.’

பிறர் உள்ளத்தை அறிய நீ உன் உள்ளத்தையே சோதித்துப் பார்த்துக்கொண் டிருக்கவேண்டும். ஏனெனில், எங்கும் மனுஷசுபாவம் ஒன்றே. சிலரிடம் சில குணகுணங்கள் சிறப்பாய் இருப்பினும் பொதுக்குணங்களில் யாவரும் ஒத்தே இருப்பார்கள். ஆகையால், எது உனக்குப் பிடிக்குமோ அது இதரர்களுக்கும் பிடிக்குமென்றும், எது உனக்குப் பிடிக்காதோ அது அவர்களுக்கும் அப்படியே என்றும் நம்பு. ஒரு மனிதன் உன்னைப்பற்றி இகழ்ச்சியாய் ஒரு சபையில் பேசும்பொழுது உன் மனத்தில் உண்டாகும் வருத்தத்தைப் பரிசோதித்திருப்பா யாகில், உன் வாழ்நாள் முழுதும் நீ ஒருவரையும் இகழவே மாட்டாய். ஒருவன் உன்னை இகழும் பொழுதும், தாழ்த்தும் பொழுதும் உனக்குண்டாகும் கோபம், துயரம், துக்கம்

இவைகளை மனத்தில் வைத்துக்கொண்டு இருப்பாயாகில், நீ ஏன் மற்றவர்களை இகழப்போகிறாய்!

---

18. இராமலிங்கசுவாமிகள் கல்வி கற்ற வரலாறு—I

சிதம்பர இராமலிங்கசுவாமிகளை அறியாதார் ஒருவரும் இலர். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் எவ்விடத்தும் பாடப்பட்டு வருகின்றன. அவர் திராக்ஷா பாகமாகச் செய்யுள் செய்வதில் அதி சமர்த்தர். அவர் பாட்டுக்கள் பண்டித பாமர ரஞ்சகமாக இருத்தலின், அவை கல்வி மிகுதியும் இல்லாதவரையும் மனத்தை அழலிடைப்பட்ட வெண்ணெய்போல உருகும்படி செய்து அன்பில் ஈடுபடுத்துகின்றன. இத்தகைய பெரியார் தமது இளமைப் பருவத்தில் எங்ஙனம் கல்விகற்றுக்கொண்டார் என்பது மிக்க சுவையை விளைக்கின்றது. காலஞ்சென்ற என் ஆசிரியர் சிவஸ்ரீ கலியாண சுந்தர யதீந்திரர் அவர்கள் வாயிலாக யான் கேட்ட அவ்வரலாற்றை இங்குக் குறிப்பிடுவேன்.

இராமலிங்கசுவாமிகள் இளமையிலேயே தம் பெற்றோரை இழந்துவிட்டமையால் தம் தமயனாராகிய சபாபதிப் பிள்ளையின் ஆதரணையில் வளர்க்கப்பட்டு வந்தனர். சபாபதிப் பிள்ளை தமிழிலே இலக்கிய இலக்கணங்களைப் போதுமானவரையிற் கற்றுச் சிவபுராணபடனஞ் செய்வதில் தேர்ச்சிபெற்றிருந்தார். அவர், சைவ புராணங்களைக் கேட்போர் பக்திபரவசராகும்படி செவ்வையாய்ப் பிரசங்கஞ் செய்வார். அவர் தமது வயிற்றுப்பிழைப்பை முன்னிட்டுச் சென்னையை அடைந்து, சைவப் பிரபுக்கள் சிலரைத் துணையாகப்பற்றித் தமது வாழ்க்கையைச் செலுத்தி வந்தார். இங்ஙனம் வாழ்ந்து

வருவார்க்குத் தம் இளவலாகிய இராமலிங்கத்துக்குக் கல்விப்பயிற்சி செய்விப்பதில் பெரிதும் ஆவல் உண்டு. அவர் அக்கால முறைப்படி திவாகரம், நிகண்டு, சதகம், அந்தாதி முதலிய நூல்களைத் தம் அருமைத் தம்பியாருக்கு நாடோறும் வழுவாமல் கற்பிக்கலானார். ஆனால், இராமலிங்கமோ சொல்லி வைத்த பாடங்களைக் கண்ணுங்கருத்துமாகக் கற்பதில்லை; எந்நேரமும் ஏதோ வேறொரு சிந்தையில் ஆழ்ந்து, தமயனார் மொழியைச் சிறிதும் நோக்குவதில்லை. சதா சருவதா நினைவுவேறுபட்டிருக்கும்இளையவராகிய இராமலிங்கம் கல்வி கற்கமாட்டாத முழுமகன் என்றும், அவர் ஒருநாளும் தமது கருத்தை நிறைவேற்றா திருத்தலின், வழிக்கு வராத பிள்ளை யென்றும் சபாபதிப்பிள்ளை தீர்மானித்துவிட்டார். அவர் உலக வழிக்கு ஒத்துவாராத பிள்ளை என்பது உண்மைதானே! அவர் தன்மையைக் கண்ட சுற்றத்தாரும் அவ்வாறே எண்ணினார்.

இராமலிங்கமோ எங்கேனும் குறிப்பின்றிச் சுற்றுவதும், மக்கள் கூட்டங்களில் சென்று அவர்கள் வாயைப் பார்த்துக் கொண்டு நிற்பதும், கோயில் குளங்களுக்குச் சென்று வழிபாடு புரிவதும், வேடிக்கை பார்ப்பதுமாகக் காலங் கடத்திவந்தார். அவர் தாமாகத் தமக்குத் தோன்றிய புத்தகங்களை எடுத்துக்கொண்டு, தமக்கு விருப்பமான நேரங்களில் படிப்பார். ஆனால் தம் தமயனார் கட்டளைப்படி எந்த நூலையும் உருப்போட்டுப் படித்து ஒப்புவிக்கமாட்டார். எனினும், இராமலிங்கம் ஒருநாளும் தம் தமயனாரை அவமதித்தேனும், எதிர்த்தேனும் பேசியதில்லை; அவரைக் குறித்துப் பிறரிடம் முணுமுணுத்துக் கொண்டதுமில்லை.

சபாபதிப் பிள்ளை, தம்பி இராமலிங்கத்தை எவ்வாறேனும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென் றெண்ணி

அவர் எதிரிலேயே தம் அன்புள்ள மனைவியை அழைத்து, 'இராமலிங்கம் என் சொற்படி நடவாததால் இனி அவனுக்கு நீ சோறுபோட வேண்டாம்; அவன் இப்பொழுதே வீட்டை விட்டு நடக்கவேண்டும். நீ என் கட்டளைமீறி நடந்தால் உன்னையும் ஓட்டிவிடுவேன்,' என்று கண்டிப்பாகத் திட்டஞ் செய்தார். இக்கட்டளையை இரண்டொரு முறை பிரயோகித்தும் இராமலிங்கம் சீர்திருந்தவில்லை. பின்னர் இராமலிங்கம், தமயனார் இல்லாத வேளையிலோ, அன்றிக் கண்ணயரும் வேளையிலோ தெரியாமல் புழைக்கடை வழியாகப் போந்து, தம் அண்ணியாரைக் காண்பார். அவ்வம்மையோ கற்பிற்சிறந்த உத்தமி; கருணை நிறைந்த செல்வி; குடிப்பிறப்பும், ஒழுக்கமும் நிரம்பிய குணவதி. அவள் தம் கணவனார் கட்டளையை இனிதுணர்ந்தும், அவர் வெகுண்டு செய்த பணியை மீறி, அவருக்குத் தெரியாமல் தம் மைத்துனச் சிறுவருக்குத் தாம் பெற்ற சேயினும் பெரிய சேயாக அவரை மதித்து அன்பாற்குழைந்து, அவர் தம் செய்கைக்கு மனம் வெதும்பி நாடோறும் இனிய உணவையும், அரிய மதியையும் புகட்டி வந்தாள். இவ்வம்மையின் செம்மை மொழிகளும் இளைய இராமலிங்கத்துக்கு நன்மை தந்தில.

இங்ஙனம் பன்னெடு நாட்கள் சென்றன. தம்பி இராமலிங்கம் தலையெடுத்ததே யன்றிக் கலை யெடுத்ததில்லை. தமயனார் அறியாவண்ணம் வீட்டுக்கு வருவதும், சோறுண்பதும், கூறை பெற்றுக் கொள்வதும், தமது வழியிலேயே முனைந்து நிற்பதுமாகவே இருந்து வந்தார். சபாபதிப் பிள்ளையோ தம் தம்பியைக் குறித்து ஒன்றும் கேளாது விட்டுவிட்டார். தம் மனைவி தமக்குத் தெரியாமல் ஊட்டி வருவது சிலவேளைகளில் அவருக்குத் தெரியவந்தது.

அவர் அதனைக் காணாததுபோல் புறக்கணித்து விட்டுவிட்டார். இவ்வாறிருக்கும் நாளில், ஒரு நாள் சபாபதிப் பிள்ளையின் தாயார் திவசம் வந்தது. அன்று அவர், தம் உறவின் முறையாருக்கும், நண்பருக்கும் தெரிவித்து, மிகச் சிறப்பாகப் பிராமண சந்தர்ப்பணை, அன்னதானம் முதலிய செய்தல் இயல்பு. அங்ஙனமே சிரார்த்தம் சாஸ்திர ரீதியாய்ச் சிரத்தையுடன் நிறைவேறிற்று. எல்லாரும் ஒருங்கமர்ந்து அறுசுவை யுண்டியை ஆர அமர உண்டு களித்தனர். பின்னர், விருந்தினர் எல்லாரும் மேன்மாடத்திற் சென்று, குளிர்ந்த சந்தனம் பூசியும், பரிமள புஷ்பத்தின் நறுமணம் நுகர்ந்தும், தாம்பூலந் தரித்தும் இன்னுரை யாடிக்கொண்டிருந்தனர்.

முகமும் அகமும் மலர்ந்து, வந்த விருந்தை ஊட்டி வருவிருந்தை எதிர் நோக்கி யிருந்த சபாபதிப்பிள்ளையின் மனைவிக்கோ உண்பதற்கு மனம் வரவில்லை. அந் நங்கை வேலை மிகுதியால் களைப்புற்று உள்ளமும் கெட்டுச் சோர் வடைந்திருந்தாள். சபாபதிப்பிள்ளையும் தம் சகோதரனை மறந்தவரல்லர். அவர் அனைவரும் வரிசையாகக் கூடி உண்ணுந் தருணத்தில் தம்பியை நினைத்துக்கொண்டார். ஆனால், என் செய்வார் பாவம்! அவன் எங்ஙனமேனும் வீட்டுக்கு வந்து தன் அண்ணியால் உண்பிக்கப் படுவான் என்பது தெரியும். எனினும், தம் அரும் பிறப்பு உடனிருந்து உண்பதற்கில்லையே எனச் சிந்தாகுலம் கொண்டார். பின் அவர் சிறிது சிந்தித்து, எல்லாம் திருவருட் செயலென எண்ணி, வாளா விட்டு விட்டார். அதனால், அன்று அவருக்கும் மன நிறைவு உண்டாக வில்லை.

மணி மூன்றாயிற்று. அதுதான் சமயமென்று அறிந்தனர் இராமலிங்கம். அவர், தம் தமயனார் இப்பொழுது

கண்ணுறக்கங் கொள்வார் என்றெண்ணி வீட்டுக்குள் போந்தார். அவர் வரவை எதிர் நோக்கிய வண்ணம் வழி மேல் விழிவைத்துப் பார்த்திருந்த அவர் அண்ணியார் உடனே விரைந்து சென்று அவருக்கு இன்னடிசில் ஊட்டினர். கள்ளத்தனமாக இவ்வாறு தம் மைத்துனருக்கு உணவு தருதல் அவ்வம்மைக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'ஐயோ! எத்தனையோ பேர் வந்து மகிழ்வோடு வயிறார உண்டிருப்ப, இவர் இவ்வாறு வேளை தப்பி வந்து பதனழிந்த உணவை உட்கொள்ளும்படி இறைவன் கட்டளை நேர்ந்ததே!' என்றுன்னி உருக, அவர் கண்களில் நீர் முத்து முத்தாய் வடிந்தது. அது, 'பசி ருசியறியாது' என்னும் பழமொழிக்கிணங்க ஆர்வமும், எங்கே தமயனார் வந்துவிடுவாரோ என்ற அச்சமும் ஓங்க விரைந்துண்ணும் இராமலிங்கம் கண்களுக்குப் புலப்பட்டது. புலப்படலும், அவர் 'அன்பு அன்பைத் தோற்றுவிக்கும்', என்னும் உண்மைக் கிணங்க, தம் அண்ணியார் முகம் பொலிவழிந்து விழி நீர் பெருக்குதலைக் காணப் பொறாராய் உண்ணுதல் தவிர்ந்து, அவரை நோக்கி, 'அண்ணியம்மா, நீர் ஏன் புலம்புகிறீர்?' என்று வினவினர். அதற்கு அவர் மறுமொழி புகலாது வாளாவிருந்தார். அவரை மீண்டும் மீண்டும் இராமலிங்கம் வற்புறுத்தினர். அதனால், அவ்வம்மை தமது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'தம்பி, உன் நிலைமையைக் குறித்துத் தான் அழுகிறேன்; நீ எப்படி உலகத்தில் வாழப்போகிறாய்? நீ இப்படி எத்தனை நாளைக்குத் திருடனைப்போல வந்து போவது? எனக்குப் பிற்காலத்தில் உன் வாழ்க்கை என்னாகும்?' என்று கூறித் தேம்பித் தேம்பிப் புலம்பினர்.

இராமலிங்கம் அறிவு தூண்டப்பட்டது; உணர்ச்சி ஓங்கியது. அன்னையினும் ஆயிரம் மடங்கு அதிகமாகத்

தம்மைப்பேணி வளர்த்த அண்ணியார் வருத்தத்தை அவ ரால் தாங்க முடியவில்லை. அதனால் அவர் அவ்வம்மையை நோக்கி, 'அண்ணியம்மா, உங்கள் விருப்பம் யாது? அதைக் கூறினால் தட்டின்றிச் செய்வேன்', என்றார். அதற்கு அவ்வம்மையார் 'நீ உன் தமையனார் விருப்பத்தின்படி கல்வி கற்க வேண்டியதைத் தவிர்த்து நான் என்ன சொல்லப் போகிறேன்,' என்றார். 'ஆனால், அப்படியே நான் செய் யத் தடையில்லை. நாளைக்கு மேன்மாடியில் எனக்குத் தனியே ஓர் அறையை விட்டுவிட வேண்டும்; அவ்வறையை மெழுகித் தூய்மை செய்து வைத்து விடுங்கள்; நான் கல்வி கற்கத் தொடங்குவேன்,' என்றனர்.

அவர் அண்ணியம்மை அங்ஙனமே செய்ய ஒப்புக் கொண்டாள். அதன்மேல் இராமலிங்கம் தமக்கு ஒரு நிலைக்கண்ணாடியும், சில பரிமள வர்த்திகளும் வேண்டுமென அண்ணியிடம் கூறிப் பொருள் பெற்றுக்கொண்டு அவற்றை வாங்கி வந்து தமது அறையிலே வைத்துக்கொண்டார்; பிறகு, அவ்வறையின் கதவை மூடிக் கொண்டு நாடோறும் படித்துக்கொண்டு வந்தார். சபாபதிப்பிள்ளை, ஏதோ தம் இளவல் நல்வழியில் திரும்பிவிட்டான் என்றெண்ணிப் பேசாமலிருந்தார். ஆனால், இராமலிங்கம் இன்ன நூலைப் படிக்கின்றார் என்பது யாருக்கும் தெரியாது. கேட்பவர் கட்கெல்லாம் அவர், 'இராமலிங்கம் ஏதோ குறியாய் ஓரிடத் தில் தங்கித் தரித்து இருக்கிறான்; ஆனால், கதவை மூடிக் கொண்டு நாள் முழுவதும் படித்துக்கொண்டிருக்கிறான்; அவன் இன்னது படிக்கிறான் என்பது இறைவனுக்கே வெளிச்சம்,' என்று மொழிந்தனர். எனினும், அவருக்கு வீடு தங்கித் தம் தம்பி யிருப்பது பெருமகிழ்ச்சியை விளைத்தது.

19. இராமலிங்கசுவாமிகள் கல்வி கற்ற வரலாறு—II

நாள் பல சென்றன ; ஒருநாள் சபாபதிப்பிள்ளைக்குக் கையேடு வாசிக்கும் பெண்மணி நோயுற்றாள். அவருக்குக் கையேடு அவ்வம்மையே வாசித்து வருதல் வழக்கம். அவ்வம்மை இனிய குரலும், இசைப்பயிற்சியும் உடையவள் ; பிரசங்கத்தின் இடையிடையே தேவாரத் திருப்பாசுரங்களைப் பண்ணுடன் பாடுவாள் ; அன்றியும், பௌராணிகருக்கு ஆங்காங்கு வேண்டப்படும் மேற்கோள்களைச் சமயமறிந்து எடுத்துச் சொல்லுவாள். அதனால், சபாபதிப்பிள்ளைக்கு அவ்வம்மையின் உதவியின்றிப் புராணஞ் சொல்லுதல் இயலாததாக இருந்தது. எடு வாசிப்பவர் பெண்பாலா யிருந்ததால் சில இடர்பாடுகளும் இருந்தன. அவ்வம்மை கைம்பெண் ; சபாபதிப்பிள்ளைக்கு நெருங்கிய உறவினள். அவள் யாருடைய பார்வைக்கும் தோன்றுதவாறு அவளைச் சுற்றி ஒரு மெல்லிய துணி சதுரமாகக் கட்டப்படல் வேண்டும். அங்ஙனம் கட்டப்படுதல் குறித்த நேரத்துக்கு முன்னரே நடைபெறல் வேண்டும். இவ்வளவு இடர்ப்பாடுகளையும் எண்ணுமல் சபாபதிப்பிள்ளை அவள் வருவாய் தமது குடும்பத்தைச் சார்தலினுலும், அவள் திறமையுடையவளாக இருத்தலாலும், வேறொருவர் தமக்குக் கிடைக்காததாலும், அவளைக் கொண்டே தமது தொழிலை நடத்திவந்தனர். ஆனல், அவருக்கு அடிக்கடி தம் சகோதரர் கையேடு வாசிப்பதா யிருந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும் என்னும் எண்ணம் உதிப்பதுண்டு.

அற்றைநாள் கையேடு வாசிப்பவள் பிணியாய் இருந்ததால் பிரசங்கத்தை நிறுத்தி வைக்கவேண்டும். ஆனல் அன்று பிரசங்கம் நிறுத்தக்கூடாததா யிருந்தது. பிரசங்கம்

வைத்தவர்கள் ஆவலோடு அதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்; அவர்கள் ஏமாற்றத்தை அடைவது சபாபதிப் பிள்ளைக்கு விருப்பமில்லை. அதனால் அவர், தம் இனிய அரிய மனைவியை அழைத்து, 'இன்று என்ன செய்வது? பிரசங்கத்தை நிறுத்த எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை; ஏடு வாசிக்கவே ஆளில்லை. நான் தனியாகச் சொன்னாலும் சபைக்கு அலங்காரமாய் இராது,' என்றனர். அவ்வம்மை உடனே, 'இதோ வந்துவிட்டேன்,' என்று கூறித் தம் கொழுந்தரிடம் சென்று, 'தம்பி, உன் தமையனார் பிரசங்கம் நின்றுவிடுகிறதே என்று தவிக்கிறார்; நீ ஏடு வாசிக்கமாட்டாயா? நீ வாசிப்பதாய் இருந்தால் பிரசங்கம் நடைபெறலாமல்லவா? வாசிக்கிறாயா? தைரியமாய்ச் சொல்,' என்று கேட்டாள். இராமலிங்கம் சிறிதும் தாழ்த்தாது கையேடு வாசிக்க ஒப்புக்கொண்டார். இதனை உவகை துளும்பக் கேட்டுக்கொண்ட அவ்வம்மை, தம் கணவனாருக்கு இதனை எடுத்து மொழிய அவர் அரைமனமாய் ஒப்புக்கொண்டார்; அவருக்கு, 'இராமலிங்கம் எப்படிப் படிப்பானோ!' என்ற ஐயுறவு இருந்தது.

அன்று இரவு பிரசங்கம் துவக்கப்பட்டது. சபாபதிப் பிள்ளை கடவுள் வணக்கச் செய்யுட்களைச் சொல்லி முடித்தனர். இராமலிங்கம் புராணம் வாசிக்கத் தொடங்கினார். எடுத்த எடுப்பே எல்லாருக்கும் இன்பத்தை ஊட்டியது; குரலின் சுவையும் கூடிக்கொண்டது; சொல்லும் வகையோ மனத்தைக் கரைக்கிறது; ஒவ்வொரு மொழியும் உள்ளத்தே பொதிந்து அன்பிலூறித்தேனிலூறியபழம்போலத்தித்தித் தூறி வருகின்றது. பாட்டைப் பிரித்துப் பிரித்து அந்நுவயித்துப் படித்தார்; இடமறிந்து தொடர்களை எடுத்துக் கொடுத்தார். மக்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். சபாபதிப்

பிள்ளைக்கோ உவகை பொங்கி வழிந்தது. சிலர், 'அப்பா, இவர் தீபத்தில் ஏற்றிய தீவர்த்தி,' என்றார்கள். சிலர் 'இவர் ஒரே தறியில் துணித்த துண்டு,' என்றார்கள். சிலர், 'அண்ணன் துப்பாக்கி என்றால் இவர் பீரங்கி,' என்றார்கள். சிலர், 'இது உற்பாத பிண்டம்,' என்றார்கள். பிரசங்க சபையில் தேவாமிர்தம் கொழித்தது.

அன்றிரவு பிரசங்கம் முடிந்தவுடன் சபாபதிப்பிள்ளை மனையைச் சேர்ந்து, தம் அரும்பெறல் வாழ்க்கைச் செல்வியிடம் நிகழ்ந்தவற்றைச் செப்பி நிறை மகிழ்வு கொண்டார். அவ்வம்மை, 'ஏதோ கடவுள் கண்திறந்தார்,' என்று முக மலர்ச்சியுடன் தம் கணவரிடம் மொழிந்து விட்டு, உள்ளுக்குள் பெருங்களிப் படைந்தார். அவ்வம்மை மறு நாள் தம்பிக்குக் கண்ணேறு கழித்தாள்; இராமலிங்கம் புன்னகை அரும்பினார். இப்பொழுதும் இராமலிங்கம் தம் மூத்தவர் எதிரிலே வருவதில்லை. இங்ஙனம் பல நாள் சென்றன.

ஒருநாள் சபாபதிப்பிள்ளை திடீரெனக் கடுங்காய்ச்சலால் வருந்தினார். அன்று முத்தியாலுப்பேட்டையில் செல்வத் திற் சிறந்த ஒரு வணிகர் வீட்டில் பிரசங்கம். அவருக்கோ படுக்கையை விட்டு எழவும் இயலவில்லை; பித்தம் தலை சுற்று கிறது; தலையிடிக்கிறது. அவர் மனைவியிடம் சொல்லித் தம்பி இராமலிங்கத்தை அழைத்தார். 'அப்பா, நீ செட்டியாரிடம் சென்று, நான் இவ்வாறு துன்புறுவதாகச் சொல்லிவிட்டு வா,' என்று அனுப்பினார். அவர் பணித்தவாறே இராம லிங்கம் அங்கே சென்றார். மக்கள் திரண்டிருந்தனர்; சுவாமிப் படங்கள் பல அழகாக அலங்காரஞ் செய்யப்பட் டிருந்தன; கூடத்தின் நடுவில் பெரிய நடராஜர் படம் ஒன்று ரோஜாமாலை சூட்டி ஒரு பலகையின்மீது வைக்கப்பட்டிருந்

தது. அப்படத்தின் திருவுருவம் புதிதாகச் சமைக்கப் பட்டது; அது பேரழகு ததும்பி யிருந்தது. அதன் முன் னர்த் தேங்காய், பழம், கடலை, தின்பண்டங்கள், கற்கண்டு முதலியன தட்டு தட்டாய் வைக்கப்பட்டிருந்தன. விளக்கு கள் எங்கும் தொங்கவிடப்பட்டிருந்தன. இந்நிலையில் இராம லிங்கம் சென்று பிரசங்கம் நடைபெற முடியாமையைப் பற்றிக் கூறினால் அவர்கள் மனம் எப்படியிருக்கும்? செட்டி யார் உள்ளம் உடைந்தார்; பெரு மூச்செறிந்தார்; 'இனி என் செய்வேன்!' என்று கவன்றார். அப்போது, அவருக்கு அக்கம் பக்கத்திலே யிருந்தவர்கள் அவர் நிலையை உணர்ந்து, இராம லிங்கத்தைத் தம்மால் இயன்ற வரையில் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டனர். அவரோ தமக்கு யாதுந் தெரியாதெனப் பன்முறை தடுத் தார். அவர்கள் அவரை விட்டபாடில்லை. அதன்மேல் அருள் கனிந்த நெஞ்சையுடைய இராமலிங்கம் அன்று சொல்லக் கடவதாகிய பரஞ்சோதி முனிவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிளையாடற் புராணத்துள், வாதவூரடிகளுக்கு உப தேசித்த படலத்தைப் பக்திச்சுவை சொட்டச் சொட்ட யாவரும் கருவி கரணாதி சேட்டையற்று நிற்ப, விடிய விடியப் பிரசங்கித்தனர். ஜனங்கள் வியப்பால் விழுங்கப் பட்டு இராமலிங்கம சாதாரண மனிதரல்லர்; ஏதோ தெய் வப்பிண்டம் எனக்கொண்டு அவர்பால் அச்சமும், அன்பும் கொண்டு நின்றனர்.

பின்னர், அவ்வணிகப் பிரபு சபாபதிப் பிள்ளைக்குப் பதிலாக இனி அவர் தம்பியே பிரசங்கம் செய்தால் போது மென்று கூறினர். சபாபதிப்பிள்ளை, 'குடும்ப பாரம் இனிக் குறையும்; இருவரும் பொருள் ஈட்டுதல் சாலவும் நன்றெண

உட்கொண்டு' வேறோரிடத்தில் தாமும் ஒரு பிரசங்கஞ் செய்து வந்தனர்.

இப்படி நிகழும் காலத்தில், சபாபதிப்பிள்ளைக்குத் தம் தம்பியார் பிரசங்கத்தைக் கேட்க வேண்டு மென்ற வேணவா உண்டாயிற்று. அதனால், அவர் ஒருநாள் முக்கியமாகத் தம்பியாருக்கும், பொதுவாகப் பிறருக்குந்தெரியாதபடி சபையின் ஒரு மூலையில் இருந்தார். பிரசங்கம் தொடங்கப்பட்டது ; கையேடும் இல்லை ; பேரேடும் இல்லை. இராமாலிங்கம்பெரிய புராணத்திலே 'திருவாரூர்ச் சிறப்பை' எடுத்துக் கொண்டு சோனா மாரியாகப் பொழியத் தலைப்பட்டார். அவர் வாக்கிலே மதுரமான தமிழ்ச் சொற்கள் தங்கு தடையின்றிக் கரைபுரண்ட வெள்ளம்போல வந்து கொண்டிருந்தன; மனத்தில் கருத்துக்கள் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டே யிருந்தன ; சொல்லும் தோரணையும், வாக்கு படுத்துவமும், காட்டும் நயனும், பயனும், சபாபதிப் பிள்ளைக்குப் பீதியை உண்டாக்கின. அன்று முதல் அவர் தம் தமபியாரைத் தெய்வமாகவே கருதிவந்தார்.

---

20. சொந்த வீடு

சொந்த வீடு என்று சொல்லும்போதே காதுக்கு ஒருவித இன்பமும், மனத்துக்கு ஒருவித ஆனந்தமும் உண்டாகும் ; விவாக முதலிய மஹோற்சவங்களில் வீணை முதலான வாத்தியங்கள் எப்படி இனிமையாயிருக்குமோ, அதைவிட ஆயிரமடங் கதிகமான மதுரத்தையும், களிப்பையும் அந்தச் சொல் தருகின்றது. கூரைவீடானாலுஞ் சரி, உப்பரிகைகள் அமைந்த மாளிகையானாலுஞ்சரி, எது மனத்துக்கு ரம்மியமாயிருக்கிறதோ அதுவே சொந்தவீடு; அதற்கு ஈடு எதிர் இவ்வுலகத்தில் வேறோர் இடமுமில்லை ;

அதற்கு அதுவே நிகர். பட்சிகள் தத்தம் கூடுகளை மேலாக எண்ணுகின்றன; அழிந்து போய்ப் பாழடைந்திருக்கும் இடத்துக்குச் சமானமில்லை யென்று ஆந்தை நினைக்கிறது; எலியோ தன்னுடைய வளையைவிட வசதியான இடமே கிடையாதென்று அதனிடத்தில் மிகவும் ஆசை வைத்திருக்கிறது. வீட்டிலிருந்து வெளியிலே போகும் போது குத்திக்குத்தித் தள்ளினாலும் அசையாத வண்டி மாடு, வீட்டுக்குத் திரும்பும்போது தானே சுருசுருப்பாய் ஓடிவரும். நம்முடைய வீட்டுத் தோட்டத்தில் பயிராகும் காய்கறிகள் அற்பமானாலும் அவைகள் வெளியிலிருந்து கிடைக்கும் உயர்ந்த பதார்த்தங்களைவிட அதிக உருசியுள்ளவைகளாகத் தோன்றும். நாம் எங்கேயாவது சிநேகர்கள் வீட்டுக்குப் போவோமாகில் தங்களாலான மட்டும் நமக்கு உபசாரம் செய்தும் நமக்கு ஏதோ குறைவு இருக்கிறதாக அவர்களுக்கே தோன்றிச் ‘சங்கோசப் படவேண்டாம்; சொந்த வீடு போலவே எண்ணிக் கொள்ளுங்கள்’, என்று சொல்லுகிறார்களே! அது ஏனெனில் அவனவன் வீடு அவனவனுக்குச் சுகமான தென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த நியாயம் மனிதனுக்கு மாத்திரமல்ல; சகல ஜந்துக்களுக்கும் உரியதென்பதற்குத் திருஷ்டாந்தங்கள் மேன்மேலும் அடுக்குவது அவசியமன்று.

சொந்த வீட்டிலிருப்பதே பெருஞ்சுகம்; அதற்கு மேலான சுகம் இல்லை. குறையோ நிறையோ ஒவ்வொருவனும் அவனவன் வீட்டில் எஜமானன்; எலி வளைக்குள்ளிருக்கும்போது ராஜா; நாய் வீட்டுக்குள்ளிருக்கும்போது சிங்கம். அரசனுக்கு அரண்மனை எப்படியோ அப்படியே எல்லா ஜந்துக்களுக்கும் தத்தம் இருப்பிடம்.

நம்முடைய வீட்டில் நாம் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம்; என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; கேட்பாருமில்லை; தண்டிப்பாருமில்லை. நம்மைப் பார்த்துப் பொருமைப்படுவாருமில்லை; வெறுப்படைவாருமில்லை. எஜமானன் வீட்டுவாசலில் நடுநடுங்கிக் கைகட்டிக் காத்துக் கொண்டிருக்கும் சேவகனும் தன் வீட்டில் அந்த எஜமானனைப் போலச் சுயேச்சையா யிருக்கலாம். நம்முடைய குழந்தைகள் எவ்வளவு விகாரமானாலும் அவைகளிடத்தில் நமக்கு இருக்கிற பிரீதி அயலார் குழந்தைகள் எவ்வளவு அழகாயிருந்தாலும் அவைகளிடத்தில் இராது. இந்த விஷயத்தின் உண்மை அநுபவத்தினால் நன்றாய் விளங்கும். இந்தக் கருத்துடைய ஒரு பழமொழியும் உண்டு: 'காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சு,' என்று சாதாரணமாய்ச் சொல்லக் கேட்டிருக்கிறோமல்லவா? இப்படியே எந்தப் பொருளாகட்டும் நம்முடையது என்று ஒரு பற்று இருந்தால் அதன்மேல் சாதாரணமாய் அதிக விசுவாசம் உண்டு.

நம்முடைய வீட்டைச் சார்ந்த தோட்டத்தின் சௌக்கியம் எந்தத்தோட்டத்திலும் இராதென்று எண்ணுகிறோம். நாம் இருக்கிற ஊர் எவ்வளவு அசங்கியமாயும், சௌக்கியக் குறைவாயும் இருந்தாலும் அதிலேயே பழகிப் பழகி வாடிக்கையாய் விட்டபடியால் அது நமக்கு ஒத்துப்போகிறதுமன்றி, அதை மேலாகவும் எண்ணுகிறோம். இப்படியே நமது வீட்டினிடத்தில் நமக்கு உள்ள அன்பு அதை அடுத்துள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் பரவுகின்றது.

வீட்டுக்குப் புருஷனாயிருக்கிறவன் இல்லறத்தைச் செவ்வையாய் நடத்தப் பாடுபடவேண்டும். எவனொருவன் அக்கரை யில்லாமல் தன் இல்லறத்தைக் கேடு கெட்ட ஸ்திதி

யில் வைத்திருக்கிறானோ, அவனைவிடக் கொடியவனும் பாபியும் ஒருவனுமில்லை. சிறைச்சாலையைப் போலக் கண்டிப்பாயும் கடூரமாயுமிராமல், வீடு அன்புக்கு ஆதாரமாயும், இன்பத்துக்கு இருப்பிடமாயும் இருக்கவேண்டியது. புருஷனும், ஸ்திரியும் மனமொத்து ஒருவருக்கொருவர் பிரியமாய் நடந்துகொள்ள வேண்டியது; அப்படி நடந்தால் தான் இருவர்க்கும் சௌக்கியமுண்டு.

பிள்ளைகள் அடங்கியிராத வீடு வீடேயல்ல; அப்படிப்பட்ட வீட்டில் இருப்பதைப் பார்க்கிலும் வனவாசம் பண்ணுவது நலம். பிள்ளைகளினால் சந்தோஷம் பெறும் தகப்பனே தகப்பன்; தகப்பனால் விருத்தியடையும் பிள்ளைகளே பிள்ளைகள். பிள்ளைகளைச் சிறுவயதில் எப்படி நடத்திக் கொண்டுபோக வேண்டுமோ அது எல்லாருக்குமே தெரியாது. சிலர் தாங்களே தங்களுடைய பிள்ளைகளைத் தலைக் கேற விட்டுக்கொண்டு கெடுத்துப்போடுகிறார்கள். பாலியர்களை இஷ்டமான வழியிலே போகும்படி விட்டுவிட்டால் அவர்கள் கடைசியில் தகப்பன் மேலேயே திரும்புவார்கள். அவசியமானபோது பிள்ளைகளிடத்துப் பிரம்பு பிரயோகம் பண்ணாதவனுக்கு அந்தப் பிள்ளைகளே பிரம்பு ஆவார்களென்பதற்கு ஐயமில்லை. 'உன் பிள்ளையைத் திருத்து; அவன் உனக்குத் தொந்தரவு கொடாமலிருப்பான்; அன்றியும் ஈன்றவயிற்றுக்குக் களிப்பும் கொடுப்பான்,' என்று விவேகிகளுக்கெல்லாம் விவேகியென்று பெயரெடுத்துப் பிரசித்தி பெற்ற ஒருவர் சொல்லியிருக்கிறார். புதிதாக வரும் முரட்டுக் குதிரைகளைப் பழக்கித் திருப்புவது எப்படி அவசியமோ, அப்படியே சிறுபிள்ளைகளை நல்ல வழியில் கொண்டு திருப்பவேண்டும். இந்தக் கருத்தைப் பூர்ணமாகக் கொண்டு சிலர் தங்கள் பிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு

அற்ப குற்றத்தையும் கடிந்து எப்போதும் அவர்களிடத்தில் மூஞ்சியைச் சிடுசிடு வென்று வைத்துக்கொள்ளுகிறார்கள். இது பின்னையும் பிசகு; போனவழியில் விட்டுவிட்டாலும் விடலாமேயன்றி, இப்படி பிள்ளைகளை மூஞ்சியால் சுட்டுவிடக் கூடாது. பொறுமையினாலும், உபாயத்தினாலும் ஆகவேண்டிய காரியம் கோபத்தினால் ஆகாது; கோபம் மிகுந்து கடுநெஞ்சுடையவனாய் ஒருவன் காரியத்தைச் செய்யப்புகுந்தால், அது தப்பிப்போகாமல் கைகூடி வருவது அரிது. குதிரையின் வாய்க்குச் சேதம் வராமல் கடிவாளத்தை இழுத்துப் பிடிக்க வேண்டியது போல, துன்மார்க்க சிந்தை கனியும்படியாகப் பிள்ளைகளைத் தகுந்தபடி சிட்சை செய்ய வேண்டுமானாலும் அந்த சிட்சை மனவேதனைக்கு இடங்கொடாமல் இருக்கவேண்டும்.

புருஷன் மாத்திரம் செவ்வையாய் நடந்து மனைவி தகுந்த நடத்தையுள்ளவளாய் இராவிட்டால் இல்லறத்தில் சௌக்கியம் இராது. நம்முடைய கணவன், நம்முடைய வீடு, நம்முடைய வாசல் என்று அபிமானம் வைத்து, மனைவி வீட்டின் விஷயத்தில் அக்கரையாய் இருந்து இல்லறத்தை நடத்துவதில் முதன்மையாக நிற்கவேண்டியது; கணவன்சொல்லைக் கடவாமல் அடக்கமும் நற்குண நற்செய்கையும் உடையவளாய் இருக்கவேண்டும்.

நேசமுள்ள புருஷனும், அன்புள்ள ஸ்திரீயும் நல்ல பிள்ளைகளுங்கூடி வாழும் வீடு சுவர்கத்துக்குச் சமானமென்று சொல்லலாம். ஆலோசனைசபைகளில் துரைத்தன விஷயங்களைப் பற்றிப் பேசுவது முதலான பெரிய காரியங்கள் இருக்கட்டும்; நம்முடைய வீட்டில் பெண்சாதி பிள்ளைகளோடு வாழ்வதைவிடச் சுகந்தருவது ஒன்றுமில்லை. சொந்த வீடு வாசல் இல்லாவிட்டால் இவ்வுலகம் நமக்கு ஒரு பெரிய நிர்ப்பந்தமான சிறைச்சாலையாயிருக்குமே!

170669
600 008.